வாரப் பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, SILVERSMITH STREET, COLOMBO-12.

தாமரைப்பூ மார்க்
கண்களுக்கு பிரகாசமும் மூளைக்குக் குளிர்ச்சியையும் தருவது நறுமணமுடையது எங்கும் கிடைக்கும்.
சந்தனத்தைலம்
முழு இலங்கைக்கும் சோல் ஏஜண்ட்ஸ்: M. ஹைதரலி & பிரதர்ஸ். 22. 2/7 ஆதமல் பில்டிங், கொழும்பு 11

புத்தகம் 6 நந்தன ஹு ஐப்பசி மீ 10 உ [26-10-52] ஞாயிற்றுக்கிழமை ஸபர் பிறை 6 இதழ் 21

# சிமெந்து தொழிற்சாலையில் இரகசிய விசாரணை

## அந்தரங்கமாக நடத்துவது ஏன்?

### ஆடிட் கேள்விகளால் அநேகருக்கு சங்கடம் ஏற்படுமாம்

[நமது நிருபர்]

ஆடிட் டிபார்ட்மெண்டைச் சேர்ந்த அதிகாரிகளின் விசேஷ கோஷ்டியொன்று காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலையில் இப்பொழுது "மிக மிக இரகசியமான" ஒரு விசாரணை நடத்திக் கொண்டிருப்பதாக தெரிய வருகிறது.

இது இத்தொழிற்சாலையில் இவ்வாண்டதகில் நடைபெறும் இரண்டாவது விசாரணையாகும். இவ்வருட ஆரம்பத்தில் கணக்குகளைச் சரிபார்த்தது சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அறிக்கையையொட்டியே விசாரணை செய்வதற்காக விசேஷ பிரதம அதிகாரிகள் அங்கே அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

விசாரணையின் தன்மை என்னவென்பது தெரியவில்லை. ஆனால் ஆடிட் கேள்விகள் தயார் செய்வதற்காக நடத்தப்படும் ஆரம்ப விசாரணையே இது என்று பொக்கிஷ இலாகாவில் விசாரித்ததில் தெரிய வருகிறது. கேள்விகள் கடைசியாகத் தயார் செய்யப்பட்ட பிறகு அவற்றிற் சில பிரஸ்தாப தொழிற்சாலை சம்பந்தப்பட்ட அநேகருக்கு 'சங்கடத்தை' ஏற்படுத்துமென்று ஒரு உயர்தர அதிகாரி கூறினார்.

### அமெரிக்காவுக்கு பிரெஞ்சு எச்சரிக்கை

பாரிஸ்—

பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் "தீவிர தேசிய வாதிகளுக்கு" அமெரிக்கா ஆதரவு தரக் கூடாது என்று பிரெஞ்சுப் பாதுகாப்பு மந்திரி பிளெவான எச்சரித்தார். தேசிய இயக்கங்களுக்கு ஊக்கமளிப்பது எவ்வளவு அபாயகரமானது என்பதை பிரான்சின் நண்பர்கள் உணர வேண்டும் என்று மேலும் கூறினார்.

### பிளிட்ஸ் கரண்ட் ஆசிரியர்கள் கைது?

பம்பாய்—

'பிளிட்ஸ்' வாரப் பத்திரிகை ஆசிரியர் கராஞ்சியர் மீதும் 'கரண்ட்' ஆசிரியர் டி. எப். காரக்கா மீதும் பம்பாய் போலீசார் புகார் செய்ததன் மேல் அவர்களை கைது செய்வதற்கான 'வாரண்டுகளை'ப் பம்பாய் மாகாண மாஜிஸ்திரேட் திரு. எம். மோரா கான்தாஸ் பிறப்பித்தார்.

### கென்யாவுக்கு பிரிட்டிஷ் துருப்புகள்

லண்டன்—

கென்யா தலைநகராகிய நெய்ரோபிக்கு பிரிட்டிஷ் படை விமானத்தில் அனுப்பப்படுவதாக பிரிட்டிஷ் காலனிமந்திரி அறிவித்தார்.

### கொழும்பில் சுத்தானந்தர்



தூரகிழக்குப் பிரதேசங்களில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு கடந்த வாரம் இலங்கை வந்து சேர்ந்த சுவாமி சுத்தானந்த பாரதியாருக்கு கொழும்பிலுள்ள பல்வேறு ஸ்தாபனங்களும் பிரமாதமான வரவேற்புகள் அளிக்கின்றன.

சுவாமிகள் அடுத்த வாரம் முதற்கொண்டு இலங்கையின் பலவேறு பகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்வாரென்று தெரிகிறது.

### வர்த்தக ஒப்பந்தம் அங்கீகாரம்

சீனாவுக்கும், இலங்கைக்கும் மிடையே கைச்சாத்திட்டு ... தான அரிசி வர்த்தக ஒப்பந்தத்தை மந்திரி சபை கடந்த வாரம் அங்கீகரித்தது.

நிதிமந்திரி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனவும், உணவு மந்திரி சேர் ஒலிவர் குணதிலக்காவும் பிரஸ்தாப ஒப்பந்தம் அங்கீகரிக்கப்படுவதை எதிர்த்து வாக்கு அளித்தார்கள்.

### இரும்பு ஈரலால் பயனில்லை

### வைத்தியக்கருவிகள் தூங்குகின்றன

அசம்பாவிதமாக திடீரென நீரில் மூழ்கிய ஒரு மனிதருக்கு சிகிச்சை செய்வதற்காக அவரை உடனடியாக கொழும்பு பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று "இரும்பு ஈரல்" உபயோகிக்கப்பட்டதெனினும், அது இயங்காதுபோனதால் அந்த மனிதன் இறந்துவிட்டான். 'இரும்பு ஈரல்' ரூ 40,000 செலவு செய்து வாங்கப்பட்ட ஒரு கருவியாகும். ஆனால் அது இப்பொழுது உபயோகமற்றுப் போய் விட்டது.

இந்த சம்பவத்தின்மூலம் வேறு சில இரகசியங்களும் அம்பலமாகிவிட்டன. சுமார் ரூ 2 லட்சம் பெறுமதியுள்ள வைத்திய கருவிகள் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியிலும் ஏனைய ஆஸ்பத்திரிகளிலும் ரெயில்வே சாமான் ஸ்டோர்களிலும் உபயோகமற்றுத் தூங்கிக் கொண்டிருக்கிறது என்ற விஷயம் பிரஸ்தாப சம்பவத்தின் மூலம் வெளியாகிவிட்டது.

## "சரித்திரம் கற்றிருந்தால் இந்த வேலை எதற்கு?"

### அதிகாரிகளுக்கு யுவதியின் சூடு

அரசாங்க மின்சார இலாகாவில் "பஞ்சிங் ஆபரேட்டர்" வேலை செய்யும் ஒரு உதவி அதிகாரி பதவிக்கும் ஆறு யுவதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக பிரஸ்தாப இலாகாவின் தேர்தல் அதிகாரிகளின் குழு அபேட்சகர்களுக்கு பேட்டியளித்தது. தொழில் நுணுக்கக் கல்விக்கு ஆக்கமளிக்க வேண்டுமென்ற அரசாங்கக் கொள்கையை அர்த்தமாக அறியாதிருந்த அந்த அதிகாரிகள் சரித்திரம் பூகோளம், ஸிவிக்ஸ் முதலியவைகளைப்பற்றி அந்தப் பெண்களிடம் கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.

ஒரு சரித்திரப் பாடம் சம்பந்தமான கேள்வி ஒன்றுக்கு விடையளிக்கத் தவறிய ஒரு பெண், சரித்திரம் படித்திருந்தால் ஒரு "பஞ்சிங் ஆபரேட்டர்" வேலைக்கு மனுப் போட்டிருக்க வேண்டிய அவசியமில்லையென்று அந்தத் தேர்தல் குழுவுக்குச் சுடச்சுடப் பதிலளித்தாள்.

## மந்திரியின் பங்களாவுக்குத் தளவாடச் சாமான்கள்

### பொக்கிஷ இலாகாவுக்கு தலைவலி

ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு ஸி. டப்ளியு. டப்ளியு. கன்னங்கரா தமது ஜாகையிலிருக்கும் காரியாலயத்திற்கு நாற்காலி மேஜை முதலிய தளவாடச் சாமான்களை சப்ளை செய்யும்படி மறுபடியும் இவ்வாரம் பொக்கிஷ இலாகாவுக்கு மனு கொடுத்திருக்கிறார். மாதிரிகளுக்குரிய செலவினத்தின் கீழ் அந்தத் தளவாடங்களை வாங்குமாறு அவர் கேட்டிருக்கிறார்.

ஏற்கனவே ஒரு தடவை பொக்கிஷ இலாகா அவரது இந்த வேண்டுகோளை நிராகரித்திருந்தும் மீண்டும் ஒரு முறை அதனைக் கேட்டிருக்கிறார்.

அவருடைய மனு பொக்கிஷ இலாகாவுக்கு கிடைத்ததும் விளக்கம் கேட்டும், பட்ஜெட்டில் எந்த இனத்தின் கீழ் அது கேட்கப்படுகிறதென்றும் தெரிவிக்குமாறு அவர்கள் எழுதிக் கேட்டனர்.

மந்திரியின் பங்களா காரியாலயத்தின் உபயோகத்திற்காக அது கேட்கப்படுகிறதாகவும், பட்ஜெட்டில் 93வது பிரிவில் 3வது உபபிரிவின்படி அதைக் கொடுக்கலாமென்றும் பதில் கிடைத்தது.

ஆனால் அந்தப் பிரிவின்படி மந்திரியின் காரியாலயச் செலவுகள், சம்பளம் ஆகியவைதான் கொடுக்க முடியுமென்றும், அவரது பங்களா காரியாலயத்தின் உபயோகத்திற்காக தளவாடச் சாமான்கள் அதன்படி வாங்க முடியாதென்றும் இம்மாதம் 10ந் தேதி பொக்கிஷ இலாகா கடிதம் மூலம் பதில் அளித்தது.

## "கள்ளத்தோணி" இந்தியர்களைத் தடுக்க புதிய திட்டம்

"கள்ளத் தோணி" இந்தியர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் அனுராதபுரம் நகர சுத்தித் தொழிலாளர்களுடன் ஐக்கியமாகிவிடுவதால் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லையாம். அவர்களைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு விசித்திரமான முறை கையாளப்படும் என்று தெரிகிறது.

தினசரி காலையில் நகர சுத்தித் தொழிலாளர்களின் "பொட்டு" வைத்து அவர்கள் ஒவ்வொருவரையும் நன்றாகப் பரிசோதனை செய்யும்படி சுகாதார அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதென்று அனுராதபுரம் விசேஷ கமிஷனர், ஜில்லா வைத்திய அதிகாரி, சுகாதார அதிகாரி ஆகியோர் நடத்திய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர்தா வாய்வு சூரணம்

இது சகலவிதமான வாய்வு தொந்தரவு, வயிற்று வலி, புளிச்சஏட்டம், வாந்தி அஜீரணம், இடுப்புவலி, முதுகுவலி, பசியின்மை, சூதகவயிற்றுவலி, இருமல் இளைப்பு, ஆஸ்த்மா முதலிய வியாதிகளுக்குநிச்சயநிவாரணி. கர்ப்பஸ்திரீகளுக்கோர் நல்ல மருந்து.

டின் விலை ரூ 2-00. தபால் செலவு வேறு.

# நேத்திரா அமிர்த தைலம்

இதை நாள்தோறும் பாவித்துவந்தால் பீனிஸம், ஒருதலைவலி, பித்தக் கிறுகிறுப்பு, தூக்கமின்மை, மாலைக்கண், கண்கூச்சல், கண்ணெரிச்சல், நீர் வடிதல் முதலிய வியாதிகள் சுகமாகும். அளவுக்கு மிஞ்சிய உஷ்ணத்தை தணிக்கும். கண்களுக்குப் பிரகாசத்தையும், கூந்தலை அழகாகவும், கறுப்பாகவும், வளரச் செய்யும்.

12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 4-50.
6 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 2-50.
தபால் செலவு வேறு.

T. K.(டி. கே.) "மார்க்" இருக்கிறதா என்பதைப் பார்த்து வாங்குங்கள்.

## செல்லராஜா அன் கோ.

பாக்கியலெக்ஷிமி வைத்தியசாலை
170, செட்டியார் தெரு, கொழும்பு



# தானே இயங்கும் கைத்துப்பாக்கிகள்

லைசன்ஸ் கிடையாது

முதலில் பாதுகாப்பு




6 வெடி கைத் துப்பாக்கி

நாடகத்திற்கும், சினிமாவிற்கும், அபாய காலத்தில் திருடர் பயத்திற்கும் மிக உபயோகமானது வெடி தீர்கும் போது புகையையும், நெருப்பையும் கக்குகிறது.

உண்மை கைத் துப்பாக்கியைப் போல் தோற்றமளிப்பது.

ஒரு டஜன் இனும் தோட்டாக்களுடன் விலை ரூபா 8-00. விசேஷ செய்பினுலான ஒட்ஸில டஸ்ட் 666ப் நம்பர் விலை ரூபா 10-00. பார்சல் தபாற் செலவு ரூபா 1-2-0.

வேறு: ஒவ்வொரு ஆர்டருக்கும் ஒரு புட்டி ரிவால்வர் எண்ணெய் இனும்.

திருப்தியில்லாவிட்டால் பணம் வாபஸ்,

கிடைக்குமிடம்:
MESSERS. AMERICAN TRADING COMPANY,
(S. T. C.) Jullundur City (INDIA)



# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரேநாளில் அறிந்துகொள்ளலாம்

நிர். 174 ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாக கழித்து, அசதி, சோம்பல், மேல்கால் கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேட்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம காந்தல, கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை பெரியது ரூ 5-75 சிறியது விலை ரூ 3-00 இத்துடன் "ஆனந்தா கீழ்காய்நெல்லித்தைலத்தை" தேய்த்து வந்தால அதிக உஷ்ணம், கண எரிச்சல், மூலச்சூடு பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் இனுமாக அனுப்புவோம்.

பெரிது ரூ 5-75 சிறியது ரூ3-00 வி.பி.பி. செலவுவேறு

புரோப்ரைட்டர்:- M. பொலையா
ஆனந்தா வைத்தியசாலை
நிர். 174 C, செட்டியார் தெரு, கொழும்பு-11


# கேட்டுப்பிருங்கள்

குயுக்தி

விணைப்பித்தன்,
அச்சுவேலி

கே: நீர், ஸ்ரீமதி குயுக்தி யாருக்கு அதிகம் அடங்கி நடப்பதாகக் காட்டிக் கொள்கிறீரே அப்படியானல் ஏன் இன்னும் கூறுமற் சன்னியாசம் கொள்ளவில்லை?

ப: "சற்றேனும் ஏறுமாறாக இருப்பாளேயாமாயின் கூறுமல் சன்னியாசம் கொள்" என்றுதான் பாட்டுக் கூறுகிறது. இதன்படி எனக்கும் என் மனைவிக்கும் எந்த விஷயத்திலேயாவது ஏறுமாறு இருந்தால்தா[illegible] நான் சன்னியாசம்கொ[illegible]ள வேண்டும். நா[illegible]தான் அவள் அபிப்[illegible]யங்களை அப்படியே[illegible]மோதித்து வி[illegible]

ஃ

சுதன், [illegible]ழைச்சேனை

கே: ஒ[illegible] ஆடவன் ஒரு நாற்பது [illegible]யதுப் பெண்ணை அடைவத[illegible]ம் ஒரு இருபது வய[illegible] பெண்ணை அடைவதற்[illegible]ம் உள்ள வேறுபாடு என்ன?

ப: கூழன் [illegible] பலாப்பழத்திற்கும் வரிக்கன் பலாப் பழத்திற்கும் உள்ள வித்தியாசந்தான்.

ஃ

பி. ஜீ. ஜெயராஜ், கிரான்

கே: "இலங்கையிலுள்ள எந்தக் கிராமத்தையும் நான் பிற்போக்கான கிராமம் என்று கூறமாட்டேன்" என்று சோல்பரிப் பிரபு கூறுகிருரே, அவர் மிகவும் பிற்போக்கான எங்கள் கிராமத்தைப் பார்த்தால் என்ன சொல்லுவார்?

ப: அது ஒரு கிராமம் அல்ல; ஒரு பட்டினம் என்று சொல்லி விடுவார்.

ஃ

கே. முருகன்,
சித்தாண்டி

கே: அரசியல் தலைவர்கள் வழுக்கவிழும் படுகுழிகள் இரண்டு உம்மால் கூற முடியுமா?

ப: ஒன்று யு என் பி கபினெட், மற்றது ரேடியோ ஸிலோன்.

ஃ

யூ. பி. வேலுசாமி,
மட்டக்கெலல

கே: ஈட்டி எட்டினமட்டும் பாயும்; பணம் பாதாளம் மட்டும் பாயும்; உங்கள் பிரசித்திபெற்ற யுக்தி எந்தமட்டில் பாயும்?

ப: சுதந்திரன் பத்திரிகையின் இரண்டாம் பக்கத் [illegible] பாயும்.

செல்வம்,.
காங்கேசன் துறை

கே: ஐயா, நான் ஒரு மாணவன். குயுக்தியார் என்றால் என்ன அர்த்தம் சொல்லித் தாருங்கள்?

ப: பரிகாசம் புரிபவர் என்று அர்த்தம்.

ஃ

'விமல்' திரிகோணமலை

கே: மனிதன் சிருஷ்டித்த நாகரிகத்தின் கடைசிச் சின்னம் எது?

ப: அணுக்குண்டு!

ஃ

த கணேசன், மடுல்சிமா

கே: முற்றும் துறந்த முனிவரின் முடிவு என்ன?

ப: பிடிசாம் பராவது தான்.

ஃ

சொரூபராணி,
பண்டாரவளை

கே: எரிமலை எங்கே உண்டாகிறது?

ப: எங்கு அடக்குமுறை அதிகரிக்கிறதோ அங்கு எரிமலை உதிக்கிறது

ஏ. எச் அஹமத்
இஸ்மாயில், வெருகலை.

கே: உயர்வுக்கு உகந்த வழி எது?

ப: விமானப் பிரயாணம்.

ஃ

மிஸ் ரஞ்சனை சவரிமுத்து,
கொட்டாஞ்சேனை.

கே: வயோதிபர்கள், வாலிபர்கள் இவர்கள் எதைக் கண்டு கலங்குகிறார்கள்?

ப: வயோதிபர்கள் மரணத்தைக் கண்டு கலங்குகிறார்கள். வாலிபர்கள் வாள் விழியைக் கண்டு கலங்குகிறார்கள்.

ஃ

காளிதாஸன், நீர்கொழும்பு.

கே: உம்முடைய மனைவி மிகவும் அழகானவளா?

ப: முதலில், அழகு என்றால் என்ன? அதைச் சொல்லும்.

ஃ

ஏ. எச். எம். பஹாவுத்தீன்,
மதுகம

கே; என் நண்பர் ஒருவருக்கு சிரிக்கத் தெரியவில்லை. அவரை என்னவென்று சொல்லலாம்?

ப: மிருகம் என்று சொல்லலாம் ஏனென்றால் சிரிக்கத் தெரிந்த மிருகந்தான் மனிதன்.

(14 ம் பக்கம் பார்கக)

## பரிசு ரூ. 3-00

யாரும் கேள்விகள் அனுப்பலாம். ஆனால் கேள்விகள் போஸ்கார்ட்டில் மட்டுமே எழுதப்படவேண்டும் தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ஹாஸ்யமுமான பதில் கிடைக்கக்கூடிய சிறந்தகேள்வியைஅனுப்புபவர்களுக்கு ரூ 3-00 பரிசு வழங்கப்படும்.

# புதிய தீவு உதயம்!

## கடல் குமுறியது, புகை எழுந்தது அனல் கக்கியது-தீவு பிறந்தது!

## ஜப்பானருகே அதிசயம்

பசிபிக் மகாசமுத்திரத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்திக் கொண்டு ஒரு புதிய தீவு செப்டம்பர் 17ந் திகதி தோன்றியது

கடலுக்கடியில் குமுறல் ஏற்பட்டு வானத்தில் கற்களையும் அக்கினிக் குழம்பையும் புகையையும் 3000 அடி உயரத்தில் விசும்பி யெறிந்தபடி தீவு கடல் மட்டத்துக்கு மேல் எழுந்தது.

ஆறுவருடத்திற்குமுன்பு 1945 ஏப்ரல் மாதத்தில் இதே இடத்தில் கடல் மட்டத்துக்குமேல் 118 அடி உயரத்தில் ஒரு தீவு தோன்றியது. ஆனல் அந்த வருடக் கடைசியிலேயே மீண்டும் கடலுக்குள் அமிழ்ந்து விட்டது.

புதிய தீவு போனின் தீவுகளுக்குத் தெற்கே தோன்றியதை இரண்டு ஜப்பானிய மீன்பிடிப் படகுகள் முதலில் கண்டன

அப்பொழுதுதான் கடல் மட்டத்திற்குமேல தீவுஎழும்பிக் கொண்டிருந்த போதிலும் பனி படர்ந்திருந்ததால படகில்இருந்தவர்கள் தீவை சரியாகக் காண முடியவில்லை.

ஜப்பானிய பத்திரிகையான "அசாகி" ஒரு விமானத்தை அந்தத் தீவைப் பார்த்துவர அனுப்பயது. புதிய தீவு ஒன்றரை மைல் அகலமும் அரைமைல நீளமும் இருக்கிறதென அப் பத்திரிகை நிருபர் சொனர்.

வானத்திலிருந்து பார்ப்பதற்கு அந்தத் தீவு முதுகில் இரண்டு திமில்களையுடைய கடல் நாகத்தைப் போலவும் அது நெருப்பை கக்குவது போன்றும் தென்பட்டது.

அன்று காலை 11 மணிக்கு புதிய தீவு தோன்றுவதைக் கண்ணுற்ற படகோட்டிகள் இரண்டு கற்பாறைகள் கடல் நீரைக் கிழித்துக்கொண்டு மேலே எழுபபியதைப் பார்த்ததாகவும் அருகே நெருங்க பயந்து திரும்பியதாகவும் சொன்னார்கள்.

### புதுமையல்ல

புதிய தீவைச் சுற்றியுள்ள தண்ணீர் பச்சை நிறமுடையதாக இருக்கிறது

பிலிப்பைன்ஸ் தீவுக்கு வடக்கே பசிபிக் கடலில் 'டிடிகஸ் தீவு' என்று வளர்ந்து கொண்டிருக்கிறது அந்தத் தீவு தோன்றியதைவிட இது துரிதமாக மேலே கிளம்பியது.

பரந்து விரிந்துள்ள இந்த மர்ம சமுத்திரத்தில் இந்த நிகழ்ச்சி ஒன்றும் புதுமையானதல்ல. பல நூற்றுண்டுகளாக அவ்வப் பொழுது புதுப் புதுத் தீவுகள் தோன்றி கொஞ்சகாலத்துக்கு நிலைத்து பிறகு அமிழ்ந்துபோயிருக்கின்றன சில தீவுகள் அமிழ்வதும் தலைகாட்டுவதுமாக இருந்துள்ளன.

பெயரில்லாத இப்புதுத் தீவு தலையைத் தூக்கி நிற்குமோ தலையமிழ்ந்து விடுமோ தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்டவர் உயிர்த்தெழுந்து நடமாடிய மாயம்

## இறந்தவருக்குப் பதிலாக மற்றொருவர் பிரேதமானார்

### கம்பி நீட்டிய நோயாளி கடலில் குதித்தார்?

இறந்து போன ஒரு "பிரேதம்" இம் மாதம் 16-ந் தேதி இரவு 2 மணிக்கு மருதானை—ரெயில்வே ஸ்டேஷன் பக்கத்தில் நடமாடிக்கொண்டிருந்ததைப் பார்த்து அனைவரும் ஆச்சரியத்தில் மூழ்கி விட்டனர்

நடு நிசியில் விழித்துப் பார்த்தபோது ஆஸ்பத்திரி "பிரேத அறையில்" தான் படுத்திருப்பதைக் கண்டு பயந்துபோய் ஓடிவந்துவிட்டதாக அந்தப் பிரேதம் நமது நிருபரிடம் கூறியது.

தங்கொட்டுவையைச் சேர்ந்த டப்ளியு. பாரிஸ் என்னும் இந்த மனிதர் இருதய நோயின் காரணமாக 15-ந் தேதி கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரியில் 29-வது வார்டு, 17-வது படுக்கைக்கு அனுமதிக்கப்பட்டார் பின்னர் அவர் இறந்துபோனதாகப் "பிரேத அறையில்" தூக்கிப் போட்டுவிட்டார்களாம் ஆனால் தான் நிச்சயமாக இறக்கவில்லையென்று அந்த நடமாடும் "பிரேதம்" இப்பொழுது சத்தியம் செய்கிறது.

இப் பிரேதத்தின் நடவடிக்கை சட்டவிரோதமானதாகும். பிரேத அறையிலிருந்து திருட்டுத்தனமாக அது ஓடிவந்தது சட்டப்படி தவறாகும் இவ்வாறு அந்த அறையிலிருக்கும் பிரேதங்கள் எல்லாம் ஓடிவர ஆரம்பித்தால் அதனால் பிரேத அறைக்குத்தான் கெட்ட பெயர் ஏற்படும். ஆகவே அந்த அறைக்குச் சரியான கட்டுக்காவல் ஏற்படுத்தி, நகர சஞ்சாரம் செய்வதற்காக நடுநிசியில் கம்பி நீட்ட முயற்சிக்கும் பிரேதங்களை மண்டையில் அடித்து அதனுள்ளேயே போட்டுப்பூட்டி விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படியானால் தான் பெரிய ஆஸ்பத்திரியின் கௌரவத்தைப் பாதுகாக்க முடியும் ஆஸ்பத்திரி அதிகாரிகள் போட்ட இடத்தில் படுத்திருக்கத் தெரியாத நோயாளர்கள் எதற்கு ஆஸ்பத்திரிக்குப் போகிறார்களோ?

இந்தமனிதரை ஏன் உயிருடன் பிரேத அறையில் இழுத்துப் போட்டார்கள் என்பதுதான் கேள்வி. ஒல்லை சிகிட்சையைச் சகிக்க முடியாமல் செத்தவரைப்போல அவர் நடித்திருக்கலாம். இல்லையேல், அடிக்கடி தொல்லை கொடுக்கும் நோயாளிகளை ஒழித்துக்கட்டும் முறையில் இதுவும் ஒன்றாக இருக்கலாம். அதுவும் இல்லையேல், ஆஸ்பத்திரியில் நெரிசலைத் தவிர்க்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகவும் இருக்கலாம். (நெரிசல் கிடையாது என்று நிரூபிப்பதற்காக சில படுக்கைகளை காலியாக வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கலாம்)

இதற்கு முன்பும் இம்மாதிரி நடைபெற்றிருக்கிறதாம். உண்மையில் இறந்துபோன ஒரு நோயாளிக்குப் பதிலாக அவருக்கு அருகேயிருந்த படுக்கையில் உணர்ச்சியற்றிருந்த மற்றொருவரைப் பிரேத அறையில் தூக்கிப் போட்டுவிட்டனராம். ஏன், சமீபத்தில் ஒரு சீனர் சிகிட்சையின் "கொடுமையை' சகிக்க மாட்டாது திருட்டுத் தனமாக ஒரு ரிக்ஷாவில் ஏறி ஓடிப்போனாரே! அவரை இதுவரை கண்டு பிடிக்க முடியவில்லை. ஆகவே அவர் கடலில் குதித்து பிரேதமாகி இருப்பாரென்று போலீஸார் நம்புகின்றனராம்.

## தனி பல்கலைகழகம் ஒன்று தமிழருக்கு வேண்டாமாம்!

### செனட்டரின் யு. என். பி. புத்தி

"யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமிழருக்கு ஒரு பல்கலைக் கழகம் திறவினால் வளரும் தமிழர் சந்ததிக்கு இலங்கையின் இதர பகுதிகளுடன் தொடர்பில்லாமல் போய்விடும். கடந்தகாலத்திலும் எதிர்காலத்திலும் புகழும் அதிர்ஷ்டமும் கொழும்பு-கண்டிப் பாதையில்தான் பண்டிக்கிடந்தன என்பது உண்மையே" என்று அரசினர் விக்டோரியா கல்லூரி பெற்றோர் சங்கத்தில் ஆதரவில் சுளிபுரத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் செனட்டர் திரு எஸ் ஆர். கனகநாயகம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"இலங்கை பல்கலைக்கழக உபவேந்தர் இரண்டாவது பல்கலைக் கழகம் வேண்டும் எனக் கூறினர். இதை வைத்துக்கொண்டு தூரதிருஷ்டியற்ற அரசியல் வாதிகளும், தவறான பாதையில் செல்லும் கல்விமான்களும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமிழருக்கு ஒரு பல்கலைக் கழகம் வேண்டும் எனக் கிளர்ச்சி செய்கின்றனர் இது ஒரு பொது ஜனக் குரலாகக் கூடும். ஆனால் இது முட்டாள்தனமானது என்பது எனது கருத்து. பேலும பல்கலைக் கழகங்களை நிறுவுவது அடுத்த 10 ஆண்டுகளுக்கு முக்கிய பிரச்னையாக இருக்கும். எனவே அனைவரும் இதில் கவனமாக இருக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்கிறேன்."

செனட்டர் திரு கனகநாயகத்தின் கருத்து ஒன்றும் புதிதானது அல்ல. யு என். பி சிங்கள தர்டாரின் ஒலித்தட்டை நூற்றுக்கு நூறு அப்படியே அவர் ஒலிபரப்பியிருக்கிறார் தமிழர் பிரதேசத்தில் பல்கலைக் கழகம் ஸ்தாபிப்பதை யு என். பி தலைமை ஆரம்பமுதல் எதிர்த்து வருகிறது அதனால் தமிழ்மொழி வளர்வதுடன் தமிழர் சமுதாயமும் வளர்ந்தோங்கி விடுமென்பதுதான் அவர்களின் ஆட்சேபனை. செனட்டர் கனகநாயகம் அதே கருத்தை வேறு வார்த்தைகளால் இப்பொழுது பிரசாரம் செய்கிறார் தமிழர்பிரதேசத்திற்கு பல்கலைக் கழகம் வேண்டுமென்ற கிளர்ச்சி முட்டாள்தனமானதென்றும் கிளர்ச்சிசெய்பவர்கள் அறிவீனர்கள் என்றும் சொல்கிறார். இதற்கு அவர் ஒரு விசித்திரமான காரணமும் சிருஷ்டித்துக்காட்டுகிறார் யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் ஸ்தாபிதமானால், தமிழர்களுக்கு நாட்டின் இதர பகுதி மக்களுடன் நெருங்கிய தொடர்பு இருக்காதாம் அது எப்படி என்பதை அவர் விளக்கவில்லை: விளக்கவும் முடியாது

தமிழ் நாட்டில் அண்ணாமலை பல்கலைக் கழகம் ஸ்தாபிக்கப்பட்டதால் தமிழர்களுக்கு தெலுங்கர்களுடனோ அல்லது இதர ஆந்திய மக்களுடனோ தொடர்பு இல்லாமல் போய்விட்டதா? திருவிதாங்கூரில் பல்கலைக் கழகம் நிறுவியதால் கேரளய மக்களுக்கும் தமிழர்களுக்கு மிடையேயுள்ள

(12 ம் பக்கம் பார்க்க)

ஆஹா! என்ன அழகு!




பி. எஸ். ஏ. சைக்கிளில் மட்டுமே இவ் விசேஷ அம்சங்கள் அமைந்துள்ளன. ஸ்பிரிங் ரக மாற்ரஸ் ஆஸனம்; நவீன ஸ்ட்ரீம்லைன் சேப்டி பிரேக் லிங்க்ஸ்; உறுதியும் பத்திரமுமுள்ள முன்புற போர்க்குகள், பளபளப்பான உயர்ந்த ரக இனமல் பூச்சு, ஊனாக ஒயில் பாத், கியர் கேஸ்.

தவணை முறை நிபந்தனைகளுக்கு எழுதுங்கள்.

BSA

நேர்த்தியான உயர்ந்தரக பைசிக்கள்



கார்கில்ஸ்

திரிகோணமலை:
சிலோன் ஜுவல்லர்ஸ்
டொக்யாட் வீதி.

புத்தளம்:
பி. எல். எஸ். சிங்காரம் செட்டியார்.

அநுராதபுரம்:
வி. பி. முஹம்மது & பிரதர்ஸ்.
நியூ சைக்கிள் ஸ்டோர்ஸ்.

இரத்தினபுரி:
இரத்தினபுரி ஸ்டோர்ஸ்
வி. எம். அஹமத் மரிக்கார்.

யாழ்ப்பாணம்:
என். சாம்பசிவம்.

களுத்துறை: கபூர் பிரதர்ஸ்.

அகலவத்தை: அலபர்ட் சமரநாயக.

அளுத்காமம்: அளுத்காமா ஸ்டோர்ஸ்

சோல் ஏஜண்டுகள்:

கார்கில்ஸ் (சிலோன்) லிமிட்., கொழும்பும் கிளைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(தொடர் நவீனம்)

## கோர ரயில் விபத்து

பாண்டிய மன்னனின் ஏவலின்பேரில் குதிரை வாங்கச் சென்ற மாணிக்கவாசகர் பக்திமேலீட்டினால் தமது கடமையை மறந்து குதிரை வாங்குவதற்குக்கொண்டு சென்ற பணத்தையெல்லாம் தேவ கைங்கரியத்தில் செலவிட்டுத் தன்னையே மறந்திருந்ததுபோல இந்தியாவுக்குச் சென்ற சுந்தரம் பாரத பூமியில் கால் வைத்ததும் சகலதையும் மறந்து இந்திய சுதந்திரப் போராட்டத்தில் லயித்து காங்கிரஸ் தலைவர்களின் வீராவேசப் பேச்சுகளில் மனதைப் பறிகொடுத்து அவர்கள் எங்கு சென்றாலும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று வானம்பாடிபோல சுதந்தரமாக சில நாட்களைச் செலவிட்டான். சுந்தரத்துக்கு சிறு வயது முதற்கொண்டே காந்திஜீ, நேருஜீ, ராஜாஜி, ஆகியோரை நேரில் காண வேண்டும் அவர்களின் பேச்சைக் காதாரக் கேட்க வேண்டும் என்ற ஆவல் இருந்து வந்தது. அந்த ஆவலைப் பூர்த்திசெய்வதற்கு சுந்தரம் தனது இந்திய விஜயத்தைப் பூரணமாகப் பயன்படுத்தினான்

சுந்தரம் சென்ற முகூர்த்தமோ என்னமோ இந்திய சுதந்திரப் போராட்டம் உச்சஸ்தாயை அடைந்துகொண்டிருந்தது. காங்கிரஸ்காரர்களின் ஆர்ப்பாட்டத்தை சகிக்கமுடியாமல் சர்க்கார் அவசர அவசரமாக வாய்ப்பூட்டுச் சட்டங்களைப் பிறப்பித்துக்கொண்டிருந்தார்கள். சர்க்காரின் அடக்குமுறை அதிகமாக ஆக பாரத மக்களின் கொந்தளிப்பும் அதிகமாயிற்றே தவிர குறையவில்லை சர்க்கார் கொஞ்சமும் விட்டுக்கொடுக்காமல் கொடுமைப்படுத்துவதைக் கண்ட காந்தி சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்து நடத்துவதற்கு சம்மதமுமளித்துவிட்டார். பிறகு கேட்கவும் வேண்டுமா? "வெள்ளையனே வெளியேறு" என்று கோஷித்துக்கொண்டு ஆயிரமாயிரம் பாரத வீரர்கள் சட்டமறுப்பில் இறங்கிவிட்டனர்.

சட்ட மறுப்பு இயக்கத்தை முறியடிப்பதற்கு சர்க்கார் போலீஸையும் ராணுவத்தையும் ஏவிவிட்டனர். போலீஸார் சட்டமறுப்புச் செய்வோரைக் குண்டாந்தடிகொண்டு தாக்கினார்கள்; ராணுவத்தினர் கண்ணீர்ப் புகை வெடிகுண்டுகளைப் பிரயோகித்து காங்கிரஸ் கூட்டங்களைக் கலைத்தனர். தலைவர்கள் சிறைக் கதவுக்குப் பின்னால் தள்ளப்பட்டனர். சர்க்கார் செய்த அட்டூழியங்களைக் கண்டு சுதந்திரப் போர் வீரர்கள் சளைத்துவிடவில்லை நாளுக்கு நாள் அவர்களின் உற்சாகம் ஓங்கி வளர்ந்தது. சர்க்காரின் அடக்குமுறை நடவடிக்கை அளவுக்கு மீறிப்போகவே சட்டமறுப்பு இயக்க வீரர்கள் சிலர் சர்க்காரை முடமாக்கி முறியடிக்கும் எண்ணத்துடன் போஸ்ட் ஆபீஸ்களைத் தீயிட்டுப் பொசுக்கினார்கள். தந்திக் கம்பங்களை அறுத்தெறிந்தார்கள்; தண்டவாளங்களைப் பெயர்த்தார்கள்; பாலங்களையும் ரோட்டுகளையும் வெடிவைத்துத் தகர்த்தார்கள். "வெள்ளையனே வெளியே போ" என்று அண்டசராசங்களும் அதிரும்படி கோஷித்தார்கள்.

நிலைமை இப்படி நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டிருக்கையில்தான் காந்திஜீ சட்டமறுப்பு நடத்தப் போவதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாயிற்று. அதில் பெருந்திரளான ஜனங்கள் பங்குபற்றிக்கொள்வார்களென்றெண்ணி அதை முறியடிப்பதற்கு சர்க்கார் சென்னையிலிருந்து ஒரு பட்டாளத்தை ரயில் மார்க்கமாக அனுப்பிவைத்தார்கள். அப்பொழுது சுந்தரம் சென்னையிலிருந்தான். அவனுக்கு பம்பாய்க்குப்போய் காந்திஜீ சட்டமறுப்பு நடத்துவதைப் பார்க்கவேண்டும்; சாத்தியமானால் தானும் அதில் பங்குபற்ற வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. ஆகவே அவனும் அதே ரயிலில் பம்பாய்க்குப் போக சித்தமானான்.

சென்னையிலிருந்து ரயிலில் பட்டாளம் வருகின்றதென்ற செய்தியை அறிந்த காங்கிரஸ் இளைஞர்கள் சிலர் இரவோடிரவாக தண்டவாளத்தைப் பெயர்த்துவிடவே அந்த ரயில் பாதி வழியில் கோர விபத்துக்குள்ளாகிக் குடைசாய்ந்து கவிழ்ந்தது. இந்தப் பயங்கர ரயில் விபத்தில் பெருந்தொகையானோர் உயிரிழந்தனர். உயிர் தப்பிய பலரும் ஊனமடைந்தனர் உயிருக்கும் உடலுக்கும் தீங்கின்றித் தப்பிப் பிழைத்தவர்கள் ஒருவரும் இல்லையென்றே சொல்லலாம்.

பிரஸ்தாப ரயில் விபத்தில் இறந்தவர்களை இனம் கண்டு அவர்களின் பெயர்களையும், விலாசங்களையும் பத்திரிகையில் வெளியிடுவதற்கு பல நாட்கள் பிடித்தன. ஒரு வாரம்வரை தினமும் விபத்தில் மாண்டவர்களின் ஜாபிதா வெளியாயிற்று பேப்பரில் வந்த ஆயிரமாயிரம் பெயர்களில் நமக்கு முக்கியமான பெயரும் ஒன்று இருக்கத்தான் செய்தது. அதுதான் "எம். சுந்தரம், பி. ஏ. மல்லிகைத் தோட்டம், சிலோன்" என்பது

இந்தப் பெயரை முன்பு சுந்தரத்தின் பெற்றோருக்கு மொட்டைக் கடிதம் எழுதிய சதாசிவம் கண்டதும் துள்ளிக் குதித்தான். சதாசிவம் பி. ஏ. பரீட்சையில் "கோ[illegible] அடித்துவிட்டு [illegible]பொழுது தான் யா[illegible] ஒரு மந்திரியின் [illegible]சின்பேரில் இலங்கைப் [illegible]போலீஸ் இலாகாவில் இ[illegible]ஸ்பெக்டராக சேர்ந்[illegible]ருந்தான் சுந்தரம் ப[illegible]ய்— கல்கத்தா மெயிலில் [illegible]பத்தில் மாண்டான் என்ற[illegible] செய்தியைப் பேப்பரில் பா[illegible]த்ததும் அவனுடைய உச்[illegible] குளிர்ந்தது. "தொலைந்தான் [illegible] சுந்தரம் இனி, ரஞ்சிதம் எனக்குத்தான்" என்று அவன் வாய் முணுமுணுத்தது

சதாசிவம் நேரே தனக்குத் தெரிந்த ஒரு பத்திரிகை ஆசிரியரிடம் சென்று அவரைக் காக்காய் பிடித்து சுந்தரத்தின் மரணச் செய்தியை சுந்தரத்தின் போட்டோ புளாக்குடன் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொண்டான். மறு நாள் சுந்தரத்தின் மரண அறிக்கை அப் பத்திரிகையில் போட்டோ புளாக் சகிதம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இப் பத்திரிகையின் பிரதியொன்றைக் கையில் எடுத்துக்கொண்டு முகத்தில் சோகபாவத்தை உண்டு பண்ணிக்கொண்டு ரஞ்சிதத்தின் வீட்டை அடைந்து "உயிருக்குயிரான உத்தம நண்பன் ஒருவனை இழந்துவிட்டேனே!' என்று ரஞ்சிதத்தின் முன்பு முதலைக் கண்ணீர் வடித்தான்

ரஞ்சிதம் ஒன்றும் புரியாதவள்போலப் பாசாங்கு செய்துகொண்டு சதாசிவம் கொடுத்த பத்திரிகையைப் பிரித்து அதில் பிரசுரமாகியிருந்த சுந்தரத்தின் படத்தையும் அவனுடைய மரணச் செய்தியையும் பார்த்துவிட்டு பிரமிப்பு அடைந்தவள்போல நடித்தாளே தவிர ஒரு சொட்டுக் கண்ணீர்கூடவிடவில்லை இது சதாசிவத்துக்கு ஏமாற்றத்தையும் ஆச்சரியத்தையும் உண்டுபண்ணிற்று. காதலன் அகால மரணத்துக்காளானான் என்ற செய்தி கேட்டதும் அலறித் துடிப்பாள் அழுவாள் ரஞ்சிதம் என்று எதிர்பார்த்தான் அவன். ஆனால் ரஞ்சிதம் அழவுமில்லை துடிக்கவுமில்லை. ரொம்ப நாளாக படுத்த படுக்கையாக இருந்த பாட்டிக் கிழவி செத்துப்போனால் எவ்வளவு கவலையுண்டாகுமோ அவ்வளவு கவலைதானும் ரஞ்சிதத்தின் முகத்தில் காணப்படவில்லை.

"பெண்களின் மன ஆழத்தை யார்தான் அளவிட முடியும்? காதல், கூதல் என்று கூறிக்கொண்டு சுந்தரத்தைச் சுற்றிக்கொண்டு திரிந்தவள், அவன் இறந்த செய்தி கேட்டும் அசையாமல் கல்லுப் பிள்ளையார் மாதிரி இருக்கிறாளே" என்று சதாசிவம் மனதில் எண்ணிக்கொண்டிருக்கையில் "அருமையான ஒரு நண்பன்! பாவம் அகால மரணத்துக்காளானான். அவனுக்கு விரைவில் கல்யாணம்கூட நடைபெறவிருந்தது" என்றாள் ரஞ்சிதம்.

ரஞ்சிதம் சுந்தரத்தின் மரணச் செய்தியைக் கேட்டுக் கவலைப்படாமலிருந்ததும் சுந்தரத்தை அவன் இவன் என்று ஒருமையில் குறிப்பிட்டதும் சதாசிவத்துக்கு பெரும் வியப்பாக இருந்தது. ரஞ்சிதம் சுந்தரத்தைக் காதலிப்பதாகத் தான் எண்ணியது தப்பாயிருக்குமோ என்று அவன் ஐயுற்றான் பிறகு ரஞ்சிதத்தைப் பார்த்து "விரைவில கல்யாணம் நடக்க இருந்ததா? பெண் யார்?" என்று கேட்டான்.

"இந்தியாவிலே! தாய் மாமன் மகளாம்" என்று ஒரு பொய்யை மெய்போல் கூறி வைத்தாள் ரஞ்சிதம்.

"அப்படியா சங்கதி! வடக்கத்தியான் வடக்கத்தியான்தான் அவன் உன்னைச் சுத்திக்கொண்டு திரிந்ததைப் பார்த்திட்டு ஒரு வேளை உன்னைத்தான்......... ............!"

"சுந்தரத்துக்கு அந்தப் பைத்தியமும் ஒரு காலத்தில் இருக்கத்தான் செய்தது நல்லவேளையாக யாரோ ஒரு மகானுபாவன் ஒரு மொட்டைக் கடிதத்தை எழுதி மாரிமுத்துக் கங்காணிக்கு அனுப்பி அந்தப் பைத்தியத்தை தெளிய வைத்துவிட்டார். நானும் பிழைத்தேன்"

தான் எழுதிய மொட்டைக் கடிதத்தை ரஞ்சிதம் சிலாகித்துப் பேசியதால் தைரியமடைந்த சதாசிவம் "நீ சுந்தரத்தைக் காதலித்ததே இல்லையா, ரஞ்சிதம்?' என்று கேட்டான்.

"காலேஜிலிருந்த மாணவ மாணவிகளனைவரும் நான் அவனைக் காதலிக்கிறேன் என்றுதான் எண்ணினார்கள். ஆனால் நானெங்கே சுந்தரமெங்கே. கங்காணியின் மகனுக்கும் சேது காவல முதலி வம்சத்தில வந்த இந்த ரஞ்சிதத்துக்கும் சரிப்படுமா?" என்று மற்றொரு பெரிய பொய்யை அவிழ்த்துவிட்டாள் ரஞ்சிதம் ஒரு பெருமூச்சுடன்.

"அப்படியானால் அன்று விக்டோரியா பூந்தோட்டத்தில் சந்திரனைச் சாட்சியாக வைத்து சத்தியம் செய்து .............

"அதுவும் தெரியுமா, உங்களுக்கு?"

"நான் மரத்தோடு மரமாக மறைந்து நின்று உங்கள் சம்பாஷணை பூராவையும் கேட்டேன். மாரிமுத்துக் கங்காணிக்கு மொட்டைக் கடிதம் எழுதியவனும் நான்தான்"

"சத்தியம் கித்தியத்திலெல்லாம் எனக்கு நம்பிக்கையே கிடையாது அந்தப் பைத்தியம் சத்தியம் செய்தால்தான் விடுவனென்று சாதித்ததால் சத்தியம் செய்து கொடுத்தேன். அதனாலென்ன நெருப்பென்றால் வாய் வெந்துவிடுமா? அவன்மீது எனக்கு காதலிருந்தால் இந்த மரணச் செய்தியைக் கேட்ட பின்னர் இப்படிக் கலகலப்பாக பேசிக்கொண்டிருக்க முடியுமா?

"அதுதானே நானும் பார்த்தேன் அப்ப சுந்தரத்தின் காதல் ஒருதலைக் காதல்தான்"

"அந்தக் கடிதத்தை நீங்களாகத்தான் எழுதினீர்களா அல்லது யாரிடமாவது சொல்லி எழுதச் சொன்னீர்களா?'

"வறுபேரிடம் சொல்லிச் செய்விக்கக்கூடிய காரியமா இது? நானேதான் இடது கையால் எழுதினேன், வலது கையால் எழுதினால் சுந்தரம் எனது எழுத்தைக் கண்டுபிடித்துவிடுவானென்று பயந்து'

"அப்படியா! ரொம்ப சந்தோஷம்! உங்களால் நான் பிழைத்தேன் என்று சொல்லுங்கோ!'

"சதாசிவம் "ஹி......... ஹி.........ஹி" என்று முப்பத்திரண்டு பல்லையும் காட்டி இளித்தான்"

"மன்னியுங்கள். எனக்கு அவசர ஜோலி ஒன்றிருக்கு இன்னொரு நாளைக்கு சாவகாசமாக வாங்கோ" என்று கூறி சதாசிவத்தை அனுப்பிவைத்தாள் ரஞ்சிதம்.

மொட்டைக் கடிதத்தைப்பற்றி அன்று சுந்தரம் ரயிலில் பிரஸ்தாபித்ததிலிருந்து ரஞ்சிதத்துக்கு சதாசிவத்தின்மீதுதான சந்தேகம் இருந்துவந்தது. தன்னையும் சுந்தரத்தையும் சதாசிவம் பொறாமைக் கண்களால் பார்த்ததை ரஞ்சிதம் காலேஜில் பல சந்தர்ப்பங்களில் கண்டிருக்கிறாள். அதோடு சதாசிவத்துக்கு தன்மீது ஒரு கண் இருக்கிறதென்பதையும் அவன் சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் தன்னோடு இளித்து இளித்துப் பேசியதிலிருந்து தெரிந்துகொண்டிருந்தாள். அவள், சதாசிவத்தை சந்தித்து அவன் வாயிலிருந்து உண்மையை அறிவதெப்படியென்று சிந்தித்துக்கொண்டிருக்கையில் சதாசிவமே அவளிடம் வலிய வந்து உண்மையைக் கக்கிவிட்டுப்போனான்.

ரஞ்சிதத்தின் நடிப்பைக் கண்டு, அவள் சுந்தரத்தைக் காதலிக்கவில்லை என்றெண்ணிய சதாசிவம், ரஞ்சிதத்தை மனைவியாக்கிக் கொள்ளும் முயற்சியில் முனைந்தான். தனக்குத் தெரிந்த நாலு பெரிய மனிதர்களைப் பிடித்து அரிசி மூட்டை அம்பலவாணரி

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பளப் போராட்டத்தில் பெண் தொழிலாளர் தோல்வி

## ஆனால் தோட்ட முதலாளிகளிடம் மீண்டும் வற்புறுத்துவார்கள்

ஆண்களைப்போல பெண்களுக்கும் சரிசமமானசம்பளம்வேண்டும் என்ற போராட்டத்தின் முதற் கட்டத்தில் பெண்கள் தோல்வியடைந்து விட்டனர்.

இக்கோரிக்கையைப் பெறுவதற்காகத் தொழிலாளர்கள் நீண்டகாலமாகக் கிளர்ச்சி செய்து வருகின்றனர் ஆனால் அதற்குச் சட்டத்தில் இடமில்லை என்று ரப்பர் தொழில் சம்பள நிர்ணயசபை பிரஸ்தாபக் கோரிக்கையை கைவிட்டுவிட்டது.

### அடுத்த நடவடிக்கை

ஆயினும் ஆண்களுக்குக் கொடுக்கும் சம்பளம்பெண்களுக்கும் கிடைக்கக் கூடியதாக ஏர்பாடு செய்யுமாறு தொழிலாளர் பிரதிநிதிகள் தோட்ட முதலாளிகளைக் கேட்டுக் கொள்வார்கள்.

சமமான சம்பளம் கொடுப்பதைப்பற்றி முதலாளிகள் புனராலோசனை செய்வார்களெனத் தாங்கள் எதிர் பார்ப்பதாக சம்பள நிர்ணய சபையில் அங்கம் வகிக்கும் அரசாங்கப் பிரதிநிதிகள் சமீபத்தில் நடந்த மேற்படி சபையின் கூட்டமொன்றில் கூறினார்கள்.

### தேயிலைத் தொழிலாளர் சம்பளம்

தேயிலைத் தோட்டத் தொழிலாளரின் அடிப்படைச் சம்பள விகிதங்களைக் குறைக்க வேண்டுமென தோட்ட முதலாளிமார் சம்மேளனம் சமர்ப்பித்த ஒரு யோசனைமீது தேயிலை சம்பள நிர்ணய சபை ஆலோசனை செய்து இவ்விஷத்தில் ஒரு முடிவுசெய்வதை நவம்பர் 18-ந் தேதிவரை ஒத்திவைத்திருக்கிறது.

இதற்கிடையில் முதலாளிமார் பிரதிநிதிகளும் தொழிலாளர் பிரதிநிதிகளும் ஒரு மகாநாடு கூடி சமரச முடிவிற்கு வர முயர்சிப்பதென்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

தேயிலை, ரப்பர் ஆகிய இரு தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளரின் அடிப்படைச் சம்பளங்களைக் குறைக்கவேண்டுமென தோட்ட முதலாளிமார் சம்மேளனம் கோரியிருந்தது ரப்பர் சம்பள நிர்ணய சபை அதனுடைய சென்ற கூட்டத்தில் இக்கோரிக்கையை ஆராய்ந்து ரப்பர் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளரின் சம்பளங்களைக் குறைக்க நியாயமில்லையென்று முடிவு செய்து முதலாளிமார்களுடைய கோரிக்கையை நிராகரித்துவிட்டது

தேயிலை சம்பள நிர்ணய சபைக் கூட்டம் நடைபெற்றபொழுது தேயிலைத் தோட்டங்கள் நஷ்டத்தில் வேலைசெய்வதினால் அடிப்படைச் சம்பளங்களைக் குறைப்பது அவசியமென முதலாளிமார் பிரதிநிதிகள் வற்புறுத்தினார்கள். தொழிலாளர் பிரதிநிதிகளில் ஒருவரான ஜனாப் ஏ அஸீஸ் புள்ளி விபரங்களைச் சுட்டிக்காட்டி தேயிலைத் தோட்டங்களிலே 60 சதவிகித தோட்டங்களுக்குச் சென்ற வருடம் 25 சதத்துக்கு மேற்பட்ட லாபம் கிடைத்துள்ளதென்றும் இவ்வருடமும் அந்த அளவு லாபத்துக்குக் குறைவில்லையென்றும அந்த நிலையில் சம்பளங்களைக் குறைக்க நியாயமேயில்லையென்றும் விவாதித்தார்.

தேயிலையின் விலையை அனுசரித்து அடிப்படைச் சம்பள விகிதங்களை நிர்ணயிக்க முதலாளிமார் பிரதிநிதிகளும் தொழிலாளர் பிரதிநிதிகளும் கூடிப்பேசி ஒரு சமரஸ முடிவிற்குவருவது நல்லதென்று லேபர் கமிஷனர் யோசனை கூறியதின்பேரில் இவ்விஷயத்தில் சபை ஒரு இறுதியான முடிவுசெய்வது நவம்பர் 18-ந் தேதிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

இம்மாதம் 24-ந் தேதி இருதரப்பு பிரதிநிதிகளும் கூடிப்பேசி தங்கள் முடிவை நவம்பர் 18-ந் தேதி சம்பள நிர்ணய சபையிடம் சமர்ப்பிப்பார் அதன் மீது சபை ஒரு தீர்மானத்துக்கு வருமென்று அறியப் படுகிறது.




### அழுக்குவத்தை தேர்தல் கூட்டம்

எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த அழுக்குவத்தை (கிளாசல்) தோட்டத்தின் தேர்தல் கூட்டம் 11-10-52ல் ஜில்லா தலைவரும் இலங்கை இந்திய காங்கிரஸ் கூட்டுக்காரியதரிசியுமாகிய திரு கே ஜி. எஸ். நாயர் தலைமையில் நடந்தது

தலைவர் தேர்தலில் பலமான போட்டி ஏற்பட்டதின் விளைவாக இரகசிய ஓட்டளிப்பு ஸ்தலத்தில் நடைபெற்று சின்னக் கண்ணு கங்காணி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த ஜில்லாவில் இவ்வித இரகசிய ஓட்டளிப்பு நடைபெற்று தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தோட்டம் இதுவே.

பின் உபதலைவர், காரியதரிசி. உபகாரியதரிசி, கமிட்டி அங்கத்தினர்கள்தேர்ந்தெடுக்கப் பட்டபின் தலைவரும் உப பிரதிநிதி திரு எஸ். முத்தையாவும் முறையே தமிழிலும் சிங்களத்திலும் பேசியபின் கூட்டம் இனிது முடிந்தது.

### சோனகம தோட்டத்தில்

கித்துல்கலையைச் சேர்ந்த சோனகம தோட்டத்தில் இலங்கை இந்திய காங்கிரஸ் சோனகம தோட்டக் கமிட்டித் தலைவர் திரு எம். மாரிமுத்து தலைமையில் அண்ணல் காந்திஜியின் பிறந்ததின விழா வை அதிக விமரிசையுடன் கொண்டாடப்பட்டது

அண்ணலின் திருவுருவப் படத்தை மூவர்ணங்களால் அலங்கரிக்கப்பட்ட இரதத்தின்மீது வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பட்டு, முத்துமாரியம்மன் சன்னிதானத்தில் பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது திருவாளர்கள் பி. முத்துசாமி (தோட்டக் கமிட்டிக் காரியதரிசி) எஸ. கருப்பையா (தோட்டக் கமிட்டிப் பொக்கிஷதார்) ஆகியோரும் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர்கள்.

### பெரிய கோமரைத் தோட்டம்

மேற்படி தோட்ட மேல் கணக்கு, நடுக்கணக்கு, பணிபக்கணக்கு இம்மூன்று டிவிஷன் தேர்தல் கூட்டம் ஜில்லாத் தலைவர் திரு வி ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது தலைவர் அவர்களால் மூவர்ணக் கொடியேற்றுவித்தபின் ஜில்லாப் பிரதிநிதி திரு எஸ். காளிமுத்து தொழிலாளரின் ஒற்றுமை, முன்னேற்றம். மதுபான ஒழிப்பு தொழிலாளரின் பென்ஷன் திட்டம், லீவு நாள் சம்பளம் இவைகளைப்பற்றி பேசியபின்பு திருவாளர்கள் ஏ. ஏ குப்புசாமி (ஜில்லா மாஜித் தலைவர்) பி. சந்நிபாத, சிவணுபி ஆறுமுகம் ஆகியோர்சொற்பொழிவாற்றியதுடன் நடப்பு வருடத்திற்கு உத்தியோகஸ்தர்களைத் தெரிவு செய்யப்பட்டது

## ரஞ்சிதம்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]
டம் தூதனுப்பினேன் "ரஞ்சிதம் கல்யாணம் செய்து கொள்வதும் கல்யாணம் செய்துகொள்ளாமலிருப்பதும் என் கையிலில்லை. அவள் எப்பொழுதுவேண்டுமானாலும் அவள் இஷ்டப்படி யாரைவேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொள்ள நான் சுதந்திரம் கொடுத்திருக்கிறேன்" என்று அம்பலவாணர் தரகர்களிடம் சொன்னார். ரஞ்சிதத்தைக் கேட்டபொழுது "கல்யாணத்துக்கு இப்ப என்ன அவசரம்? இன்னும் கொஞ்சக் காலம் போகட்டுமே!" என்று தட்டிக் கழித்துவிட்டாள்.

இதற்கிடையில்சதாசிவம் உதவி சுப்ரீண்டெண்டாக "புரமோஷன்" பெற்று கண்டிக்கு மாற்றப்பட்டான். மல்லிகைத்தோட்ட கிளாக்கர் சமரவீராவின் மரணம் பற்றிய விசாரணை சதாசிவத்தின் கைக்குவந்தது. "அந்தப் பயல் சுந்தரம்மட்டும் உயிரோடிருந்தால் இந்தவழக்கில் மாட்டி ஒரு வாட்டு வாட்டிவிடமாட்டேனா" என்று தனக்குள் வீரப்பு கூறிக்கொண்டான் இப்படியிருக்கையில் சுந்தரத்தை "அரெஸ்ட்" செய்வதற்கு இந்தியாவுக்கு அனுப்பிய பிடிவாரண்ட் "பிரஸ்தாப நபர் மெட்ரூஸ்-பம்பாய் மெயில் விபத்தில் சிக்கி மாண்டான்" என்ற குறிப்புடன திரும்பிவந்து சேர்ந்தது அவ்வளவில் சதாசிவம் அந்தப் பைலைத் தூக்கி ஒரு மூலையில் போட்டுவிட்டான்.


எஸ். ரெங்கன்
பெரிய எலிபெட தோட்டப்

பொகவந்தலாவ.
5-7-1952

பாரதமாதா பிராவிடன்ட் அஷ்யூரன்ஸ் கம்பெனி.லிமிட்டெட்,
செட்டியார் தெரு கொழும்பு.

12778 நிர் பாலிஸிதார் ஸ்ரீமதி நல்லம்மாள்.

ஐயா,

எனது தாயார் மேற்கண்ட பாலிஸிதர் தங்கள் கம்பெனியில் இன்ஷ்யூர் செய்த இரண்டரை வருடம் ரூ. 310 00 செலுத்தி, திடீரென மரணமடைந்தார் அவர் இன்ஷ்யூரன்சினால் ஏற்படும் நன்மைகளை நன்கு தெரிந்து எங்கள் பாதுகாப்பிற்கு தங்கள்கம்பெனியில் செய்திருந்த இன்ஷ்யூரன்ஸ் மூலம் ரூ. 900-00 செக் அனுப்பியதற்கு நாங்களும் எங்கள் குடும்பத்தினரும் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நீங்களும் இன்றே ஒரு பாலிஸி எடுத்து நன்மை அடையுங்கள்.

இங்ஙனம்
எஸ்: ரெங்கன்.
12778 நிர். உரிமையாளர்

எல்லா இடங்களிலும் திறமைவாய்ந்த ஏஜண்டுகள் தேவை



மழை காலத்திற்கும் வெயில் காலத்திற்கும் ஏற்ற உயர்தரக்குடைகள்
ஒட்டகமார்க் இங்கிலீஷ் மேக்
குடைகளே




குறைந்த விலையில் உயர்ந்த ரகமான குடை ஒட்டகமார்க் குடை ஒன்றுதான்
எனவே
ஒட்டக மார்க் குடையையே எப்பொழுதும் கேட்டு வாங்குங்கள்

பார்க்கர் ஜூனியர் பேனுக்களும் கிடைக்கும்
வியாபாரிகளுக்கு விலையில் விசேஷ சலுகைகள் உண்டு
★
விவரத்திற்கு எழுதவும் அன்றேல் நேரில் விஜயம் செய்யவும்

ஐக்கியா டிரூப்பரி ஸ்டோர்ஸ்
6 சைனா வீதி, கொழும்பு-11 போன்: 5113


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அமெரிக்க-பிரிட்டிஷ் யுத்தம் ஏற்படுமா?

## 'பாரூக் அரசியற் பிச்சைக்காரன்'

### ஐ: நா: சபையில் மல்யுத்தம்

"1952ம் வருட பிரதம மந்திரிப் போராட்டம்" உலகவங்கி அறிக்கை சீனத்து அரிசி ... வ சமீப காலத்தில் இலங்கையில் பொது மக்களின் கவனத்தைக் கவர்ந்த முக்கிய அரசியற் பிரச்னைகளாகும். இதே சமயத்தில் உலக அரங்கிலும் மிக முக்கிய சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன.

மாஸ்கோவில் நடைபெற்ற ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் ஸ்டாலின் பேசும் போது, முதலாளித்துவ நாடுகளிடையே பிளவு ஏற்படுமென்று குறிப்பிட்டார். இது பழைய மார்க்ஸீய தத்துவம். பிரிட்டன் பிரான்ஸ் முதலிய ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்குமிடையே யுத்தம் ஏற்படுமென்று அவர் எதிர்பார்க்கிறார். கடந்த யுத்தகாலத்தில நடந்ததைப் போல பிரிட்டனுடன் நேச ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக ஸ்டாலின் பாதை செப்பனடுகிறார் என்பதையே அவரது பிரசங்கம் தெளிவு படுத்துகிறது. பிரிட்டனும் அமெரிக்காவும் யுத்தம் செய்து கொண்டாலும் ரஷ்யா தப்பிவிட முடியாது என்பது நிச்சயம். ஏன், ஹிட்லர் பிரிட்டனையும் பிரான்ஸையும் தாக்கினாலும் கூட ரஷ்யாவைத் தாக்க மறந்துவிட்டானா என்ன?

#### வாள்போச்சு கத்திவந்தது டம்டம!

பிகாசுத் தீவு பக்கத்தில் பிரிட்டன் நடத்திய 'அணுகுண்டு' பரிசோதனையைக் கேட்டு உலகமே நடுநடுங்கியது. இக்குண்டு அமெரிக்காவின் அணுகுண்டைவிட சக்தி வாய்ந்ததாம். இந்த அணுக்குண்டு சகாப்தத்தில் அணுக்குண்டு செய்வதில் பிரிட்டன் அமெரிக்காவையும் மிஞ்சிவிட்டதால், அமெரிக்காவின் உலக ஆதிக்கத்திற்கு பிரிட்டன் ஒரு பெரிய போட்டியாக முளைத்து விடலாமல்லவா? இதை ஆராய்ந்து பார்த்துதான் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் சண்டை ஏற்படுமென்று ஸ்டாலின் சூசகமாகத் தெரிவித்தாரோ? பிரிட்டனுக்கு அணுக்குண்டு இரகசியத்தைக் கொடுக்க அமெரிக்கா மறுத்துவிட்டது. ஆனால் பிரிட்டன் அதைக் கண்டுபிடித்துவிட்டது மட்டுமின்றி அணுக்குண்டுப் போட்டியில் அமெரிக்காவையும் தோற்கடித்து விட்டது.

#### சமாதானத்தைப் பற்றியும் சண்டை

சீனத்தின் தலைநகர் பீகிங்கில் ஆசிய சமாதான மகாநாடு நடைபெற்றது. "சமாதான இயக்கத்தால் யுத்தத்தை ஒத்திப்போடலாம் அல்லது தடை செய்யலாம்" என்று அதே சமயத்தில் ஸ்டாலின் மாஸ்கோவில் கூறினார். ஆனால் அமெரிக்க வெளிவிவகார மந்திரி அக்கீஸன் "சமாதான இயக்கம் வெறும் கம்யூனிஸ்ட் பிரசாரம்" என்று வாஷிங்டனில் கூறினார். கம்யூனிஸ்ட் கட்சிகளின் உலக ஸ்தாபனமாகிய "காமின்பார்ம்" மின் ஆசியக் கிளை பீகிங்கில் திறக்கப்பட்டிருக்கிறதாம். சமாதான மகாநாட்டுக்காக பீகிங்குக்குவந்த கம்யூனிஸ்டுத் தலைவர்களும், அவர்களின் அனுதாபிகளும் தென்கிழக்கு ஆசியாவைக் கைப்பற்றுவதற்காக இரகசிய மகாநாடு ஒன்றைக் கூட்டி திட்டம் தீட்டினார்களாம். அதே சமயத்தில் நேச நாட்டுப் பிரதிநிதிகள் அமெரிக்காவில் இரகசியமாகக் கூடி ... தென்கிழக்கு ஆசியா... கம்யூனிஸத்தை முறியடிக்கத் திட்டம் வகுத்தார்களாம்.

#### யானைவரும் பின்னே மணி... ......

தென் ஆபிரிக்காவிலே இந்தியர்களும் சுதேசிகளும் கைகோர்த்துக்கொண்டு நடத்தும் இனவெறி—எதிர்ப்புப் போராட்டத்தை நசுக்க மலான் சர்க்கார் அடக்குமுறை பூதத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. ஆனால் அடக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க போராட்டம் வீறுகொண்டு கிளம்புகிறது. இதுவரை சுமார் 5000 சத்தியாக்கிரகிகள் வரை சிறை புகுந்துவிட்டனர். உலக மக்கள் அனைவரும் ஏகோபித்து போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். இதில் மலானின் வீழ்ச்சி சர்வ நிச்சயம்.

#### பேனா போராட்டம்

எகிப்திலே திடீர் புரட்சி வீரன் நகீப் பல பொருளாதார, அரசியற் சீர்திருத்தங்களைச் செய்துவருகிறார். நாட்டு மக்களிடையே அவருக்கு நல்ல ஆதரவு உண்டு. தன்னை எதிர்க்கும் நிலச்சுவான்தார்களையும், இடதுசாரிகளையும் இரும்புக்கரத்தினால் அடக்கிவருகிறார். நாட்டைவிட்டோடி அஞ்ஞாத வாசம் செய்யும் பாரூக் மீது எகிப்தில் கொலை வழக்கு தொடரப்படுமாம். இதற்கிடையே பாரூக்கும், நாகிட்டும் உலகில் பல பத்திரிகைகளுக்கு எகிப்திய சம்பவத்தைப் பற்றி கட்டுரைகள் எழுதுகின்றனர். "பாரூக் ஒரு அரசியற் பிச்சைக்காரன்" என்று எழுதுகிறார் நகீப். "நகீப் ஒரு சர்வாதிகாரி" என்று திட்டுகிறார் மாஜி மன்னர் பாரூக்.

**நேருவின் ஆருடம்**

ஐக்கிய நாட்டுச் சபையின் பொதுச் சவுன்ஸில் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உலக ராஜதந்திரிகள் சொற்போரில் ஈடுபட்டிருக்கின்றனர். கொரிய யுத்த சமாதானத்தின்மீது ரஷ்ய அமெரிக்கப் பிரதிநிதிகள் வழக்கம் போல மல்யுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி தலைமையில் சென்றிருக்கும் இந்தியத் தூதுகோஷ்டியினர் தென்னாபிரிக்கப் பிரச்னையை சபையில் விவாதத்திற்கு கொண்டுவந்துவிட்டனர். இத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுப்பது சம்பந்தமான தீர்மானம் வாக்கெடுக்கப்பட்ட போது பிரிட்டன் நடுநிலைமை வகித்தது. இனம் இனத்தோடு!

"ஐ. நா. சபை தென்னாபிரிக்கா பிரச்னையைத் தீர்க்காவிடில் அச் சபையால் யாருக்கும் பயன் ஏற்படப் போவதில்லை" என்று இந்தியப் பிரதமர் நேரு சென்னைப் பொதுக் கூட்டமொன்றில் கூறினார்.

---

## 'தமிழர்களைப் புலிகள் பிடுங்கட்டும்! அவர்களை ஒழித்துக் கட்டுங்கள்!"

### புதிய முறையில் வகுப்புவாதப் பிரசாரம்

அப்பிட்ட கரதரே மேக்க—தெமல கரதரே கொட்டியா காப்பியோ முன்வ—பங்க கரயி போ (இது எங்களுக்குத் தொல்லை—தமிழர் தொந்தரவு அவர்களைப் புலிகள் பிடுங்கட்டும்—ஒழித்துக் கட்டுங்கள்) இதுபோன்ற இன்னும் எத்தனையோ துவேஷ விஷத்தைக் கக்கும் தமிழர்—எதிர்ப்புப் பதங்களை உபயோகித்து இயற்றப்பட்ட கவிதைப் பிரசுரமொன்று (கவிகொலய) பிரதி 10 சதம் என்று தெருவிலே விற்கப்படுகிறது.

பஸ் ஸ்டாண்டுகளிலும் சாலையோரங்களிலும் சந்தைகளிலும் இரண்டு மூன்று சிங்களவர்கள் ஒன்றுகூடி இக்கவிதைகளை உரத்த குரலில் பாடுகின்றனர். இதைக் கேட்பதற்கு ஒரு பெரிய கூட்டமே கூடிவிடுகிறது. இவ்வாறு தமிழர்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று நாடு முழுவதும் சிங்களப் பாமர மக்களிடையே சுலபமாகப் பிரசாரம் செய்யப்படுகிறது.

இப்பிரசுரத்தில் முதற் கவியில புத்த பகவானை வணங்கி அவரது ஆசியைக் கொண்டுதான் துவேஷ நஞ்சு கலந்த கவிகளைப் பாட ஆரம்பித்திருக்கிறார்கள். புத்தர் பெயரால் ஆக்கியர் ஒழுப்பை ஆரம்பித்தால் சிங்கள மக்களை சுலபமாக ஏமாற்ற முடியுமென்பது அவர்களின் கருத்து ... ... ... கீழே தருகிறோம்.

"துட்டகமுனு பராக்கிரமபாகு ஆகியோர் காலத்தில் நீசத்தனமான தமிழர்களை நாசஞ் செய்து நாட்டுக்கு சாந்தியை ஏற்படுத்தினோம்............... ஆனால் இன்று எங்களின் மூளையைச் சாப்பிடுவதற்காக வருடந்தோறும் 80 ஆயிரம் பேர் (களளத்தோணியில்) வருகிறார்கள். புத்தரே! இந்தத் தமிழர் தொல்லையை யாருக்குச் சொல்லுவோம்! இவ்வாறு தொடர்ந்து நடைபெறுமானால் இலங்கையும் ஒரு இந்தியாவாகிவிடும். இந்தத் தொத்துநோயைத் தொலைத்துத் தலைமுழுகிவிடுவோம். ரெங்கஸாமி முத்துசாமி சொக்கலிங்கம் பெரியசாமி முதலியோர் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு 'வாங்க பச்சையன் இருக்கிறது' என்று கூறி தேவலோகத்திற்கு போகிறோம் என்ற எண்ணத்துடன் இங்கேவந்து சாடுகிறார்கள்......... இவ்வாறு வந்த தமிழ் பிசாசுகள் தங்களின் பிள்ளை குட்டிகளுடன் இலங்கையில் மூலை முடுக்கு சந்துபொந்து பட்டிதொட்டி எல்லாவற்றிலும் நிறைந்து விட்டார்கள்... இந்தத் தொல்லையினால் எங்களுக்கு வேலையில்லை சிங்களவர்களாகிய நாங்கள் அழிந்து போகிறோம். இங்கேவந்து பெருகிப்போகும் தமிழர்கள் எங்களின் பணத்தைச் சுரண்டிக் கொண்டு போகிறார்கள். தேயிலைத் தோட்டங்களில் நிறைந்துகிடக்கும் அவர்கள் எங்களைப் பிடித்துச் சாப்பிட முயற்சிசெய்கிறார்கள். ... அவர்களால் எங்களுக்குச் சாப்பிட உணவில்லை, இருக்க இடமில்லை. இதைப் பார்த்துக்கொண்டிருந்தோமாயின், தமிழர்கள் ஒன்று கூடி எங்களின் உடலையும் சேர்த்து சாப்பிட்டு விடுவார்கள்"

இப்பிரசுரத்தில் இந்தியர்—எதிர்ப்புக் கவிதைகள் 31ம் ஒரு பாட்டும் அடங்கியிருக்கின்றன. இவ்வாறு வகுப்புவாதப் பேயிக்குத் தூபம் போட்டு தமிழர்—சிங்களவர் கலகத்தைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்க முயலும் இனத்துவேஷிகளின் விஷப்பிரசாரத்தை அரசாங்கம் ஏன் அனுமதிக்கிறதென்று ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயக்காவே தேர்தல் சமயத்தில் இம்மாதிரியெல்லாம் பிரசாரம் செய்தவர்தானே!

சகலவிதமான

இன்ஷூரன்ஸ்

சேவைகள்

முக்கிய பிரதேசங்களிலெல்லாம் கிளைகளையும், ஏஜன்ஸிகளையும் கொண்டு சென்ட்ரல் யூனியன் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட் அனைவருக்கும் எல்லாவிதமான தேவைகளுக்கும் இன்ஷூரன்ஸ் பாதுகாப்பு அளிக்கிறது.

யாழ்ப்பாணம், வவுனியா, தெல்லிப்பழை, புத்தளம், அனுராதபுரம், திரிகோணமலை, மட்டக்களப்பு, பதுளை, ஹட்டன், மாத்தளை, பேராதனை, நாவலப்பிட்டி, மாவனல்லை, காலி, ஹக்மன, நீர்கொழும்பு, பலாங்கொடை ஆகிய இடங்களிலிருக்கும் எங்கள் காரியாலயங்களில் கலந்து ஆலோசியுங்கள்.

ஆயுள் நெருப்பு-கப்பல்

விபத்துக்களுக்கும் வேறு அடக்கமான தேட் பார்ட்டி பாலிஸிகளுக்கும், எல்லாவிதமான மோட்டார் வாகனங்களுக்கும் போனஸ் லாபம் முதலியவற்றுடன் சலுகைகள் செய்யப்படும்.

தலைமை ஆபீஸ்:

Central Union Insurance Co,, Ltd,

30, UPPER CHATHAM STREET,

COLOMBO.

நாங்கள் சொல்லவில்லை!

தினமணி சொல்கிறது!!

"நாட்டியமாலா தீபாவளி மலர் வாசகர்களுக்கு சுவாரஸ்யமான நல்ல தீபாவளி விருந்து......"

நீங்களும் படித்து இன்புற வேண்டுமா? உடனே ரூ. 1-10 அனுப்பி மலர் பெறலாம்

மோகன் அண் கோ; லிமிட்டெட்.

66½, 1ம் குறுக்குத்தெரு கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழிக்காகத் தலைகொடுக்கவும் தயார்

## முஸ்லிம் மக்களின் வீர முழக்கம்

நாளாவட்டத்தில் தமிழர்களையும் சிங்களவராக்கி, சிங்கள மொழியை மட்டும் அரசகரும மொழியாக்குவதற்காக சிங்கள தர்பார் ஒரு சதித் திட்டம் தீட்டியிருக்கிறது என்பதை நாம் ஏற்கனவே அம்பலப்படுத்தியிருக்கிறோம். அத் திட்டத்தின் ஒரு பகுதிதான் கல்லூரிகளில் தமிழ் வகுப்புகளை மூடி, சிங்களம் பயிலும்படி தமிழ் மாணவர்களை நிர்ப்பந்திப்பது.

இப்பொழுது கம்பளை சாஹிராக் கல்லூரியிலும் தமிழ் வகுப்பை ஒழித்துக் கட்டிவிட்டு முஸ்லிம் மாணவர்களுக்கு சிங்களம் கற்றுக்கொடுக்கப்படுகிறது. அதனைக் கண்டித்து இம்மாதம் 5ம் திகதி நாம் எழுதிய ஆசிரியத் தலையங்கத்தை ஆதரித்து முஸ்லிம் சகோதரர்கள் பலர் கடிதங்களும் கட்டுரைகளும் அனுப்பியிருக்கின்றனர். அவற்றில் மூன்று கட்டுரைகளை மட்டும் கீழே பிரசுரிக்கின்றோம். ஆ—ர்

இலங்கையிலே வசித்து வரும் முஸ்லிம்கள் அன்று முதல் இன்றுவரை பேசி வரும் பாஷை தமிழாகவே இருக்கின்றது. அவர்களின் வீட்டுப் பாஷையும் அதுவே. இன்று இலங்கையில் வசிக்கும் சுமார் நாலு லட்சம் முஸ்லிம்களும் (நூற்றுக்கு நூறு வீதமானோரும்) தமிழையே பேசி வருகின்றனர்.

தமிழையே படித்து தமிழிலே பாண்டித்தியம் பெற்ற தமிழையே கற்றும் கற்பித்தும் வருகின்ற நூற்றுக்கணக்கான முஸ்லிம் தமிழாசிரியர்கள் ஈழநாட்டிலே இன்று இருக்கின்றார்கள். சிங்களத்தைக் கற்று அதிலே பாண்டித்தியம் பெற்ற எத்தனை முஸ்லிம் ஆசிரியர்கள்தான் இலங்கையிலே இருக்கிறார்கள்? இந்நாட்டு முஸ்லிம்களிடமிருந்து தமிழ் மொழி விடைபெற்றுப் போவதென்பது முடியாத காரியம்.

முஸ்லிம்களின் பண்பாடு கலாச்சாரம் கலை முதலியனவற்றை வளர்க்கக்கூடிய புத்தகங்கள் பத்திரிகைகள் இன்று சிங்களத்தில் இருக்கின்றனவா? ஈழநாட்டிலே தமிழ் முஸலிம்களுக்கு அவர்களது கலாச்சாரத்தைத் தமிழ் மொழிமூலம் வளர்த்துக்கொள்ள வழிவகைகள் குறைவாயிருந்த போதிலும் அண்மையிலுள்ள தென் இந்திய முஸ்லிம்கள் தமிழ் மொழிமூலம் செய்துவரும் அரிய தொண்டு இக்குறைபாட்டை ஓரளவில் நிவர்த்திக்கக்கூடியதாயுள்ளது: முஸ்லிம்களுக்காக அயராதுழைத்து வரும் எத்தனையோ பத்திரிகைகள் புத்தகங்கள் தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்துகொண்டேயிருக்கின்றன. முஸ்லிம்களின் உயர்ச்சிக்காகப் பாடுபடக்கூடிய ஒரு சிங்களப் பத்திரிகையோ அல்லது புத்தகமோ—இலங்கை முழுவதிலும்- அல்ல முழு உலகத்தின் எந்தக் கோணத்திலிருந்தாவது வெளிவருகின்றதா? முஸ்லிம்களின் இரு கண்ணென மதிக்கப்படும் திருகுர்ஆனும் திருநபி வாக்கியங்களும் தமிழிலா அன்றிச் சிங்களத்திலா மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன?

இலங்கை முஸ்லிம்கள் சிங்களத்தைத்தான் படிக்க வேண்டுமென்றும், அப்பொழுதுதான் இலங்கையின் எதிர்கால அரசியலிலே அவர்களுக்குப் பங்குண்டென்றும் ஒருசிலர் கூற முற்பட்டுள்ளனர். அன்னவர்களின் இக்கூற்று எவ்வளவு பேதமைத்தனத்திற்குரியதென்பது அறிவுடையோருக்கு விளங்கும். இலங்கை முஸ்லிம்கள் சிங்களத்தை தமது தாய்பாஷையாகக்கொள்ள முற்படின், இன்னும் எத்தனை நூற்றுண்டுகட்கு இலங்கை முஸ்லிம்களிடையே அந்தகார இருள் தாண்டவமாடுமோ தெரியவில்லை.

ஒரு ஜனநாயக நாட்டிலே முஸ்லிம்களாகிய நாம் சிறுபான்மையோராக வசிக்கும்போது பெரும்பான்மைச் சமூகத்திற்காக நாம் நலிந்துபோக வேண்டிய அவசியமில்லை. எமது உரிமைகளை அவர்கள் எமக்கு அளித்தே ஆக வேண்டும். சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளை பெரும்பான்மை ஒழித்துக்கட்டுமாயின்—நசுக்கி, முடக்குமாயின் அந்த அரசாங்கம் ஒரு ஜனநாயக அரசாங்கமாக இருக்க முடியாது—சுத்தச் சர்வாதிகார அரசாங்கமாகவே அது இருக்க முடியும்.

முஸ்லிம்களாகிய நாம—சிறுபான்மையோர்—அரசியல் உரிமை பெற்றிட சிங்களப் பாஷையைப் படித்தாக வேண்டுமென்பதும், சிங்களவர்களுடன் சேர்ந்துகொள்ள வேண்டுமென்பதும் அறிவுடையோர் உரைகளாகமாட்டா. அன்னவர்களுடன் ஒற்றுமையாகவும் சௌஜன்யமாகவும் நாம் இருக்க வேண்டியது அவசியம்தான். ஆனால், இதற்காக வேண்டி சிங்களத்தைக் கற்க வேண்டியதில்லை. பண்டுமுதல் நாம் கற்றுவந்த—தாய்பாஷையாகக்கொண்டிருந்த ஒரு பாஷையை விட்டுக்கொடுக்க முனைவருவது பேடித்தனமே.

வெலிகாமத்தான்
கல்பொக்க
வெலிகம, 6-10-52

(2)

மானிடராகப் பிறந்தவர்களுக்குள்ள கடமைகளில் முக்கியமானதுதான் தாய்மொழிப் பற்று. இப்பற்றில் ஈழநாட்டு முஸ்லிம்கள் கடமை செலுத்த தவறுகிருர்களென்றே கூறவேண்டும்.

இன்று நம் நாட்டின் அரசியல் போக்கு வேகத்தில் பல தவறுகள் நிகழ்கின்றன. அதில் தேசிய பாஷை என்றி கூறிக்கொண்டு, சிங்களத்தைக் கட்டாயப் பாடமாகச் செய்து தமிழைப் புறக்கணிக்கின்றனர் ஆளும் கட்சியினர்.

அண்மையில் ஸாஹிரா கல்லூரி அதிபர் ஏ எம் ஏ. அஸீஸ் அவர்கள் கூறினர்கள்; "இலங்கை முஸ்லிம்களின் தாய்ப்பாஷை தமிழ்" என்று. அந்த நேரத்தில் கம்பளை ஸாஹிரா கல்லூரியிலுள்ள தமிழ் வகுப்புகளை எடுத்துவிட்டு சிங்களத்தை கட்டாயப் பாடமாக செய்திருக்கின்ருர்கள் ஆசிரியர்கள்.

கம்பளை ஸாஹிராக் கல்லூரியில் பயிலும் மாணவர்களில் பெரும்பகுதியினர் முஸ்லிம்கள். முஸ்லிம்களுக்கு சிங்களம் போதிக்கப்படுவதால் அவர்கள் மத கிரந்தங்களை பயில முடியுமா என்பதுதான் கேள்வி?

தமிழ்ப் பேசும் பகுதிகளிலெல்லாம் சிங்களத்தைக் கட்டாயப் பாடமாகச் செய்கின்றதே அரசாங்கம்? இதற்கு இஸ்லாமியர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்தனரா? இப்படி இஸ்லாமியர்கள் வாழா வெட்டியாக இருந்தால் காலக்கிரமத்தில் இனம் அழிந்து என்ன நேரிடும் என்பதைச் சிந்தித்தார்களா?

தமிழ் முஸ்லிம்களின் தாய்மொழிப்பற்று இவ்வளவுதானு? கிழக்குப்பாகிஸ்தானிலே உருது மொழியைக் கட்டாயப் பாடமாகப் பாகிஸ்தான் முயற்சி செய்தபொழுது ஏன் எதிர்த்தனர் வங்க மொழிப் பற்றுள்ளவர்கள்? இனம் அழிந்துவிடும் என்ருே? இல்லையே உருது மொழியில் வேண்டிய இஸ்லாமிய கிரந்தங்கள் உள்ளனவே? என்றாலும் தாய்மொழிப் பற்று அவர்களை விடவில்லை. அந்த மொழிப் போராட்டத்தில் எத்தனை மாணவர்கள் உயிர் இழந்தனர். வெற்றியும் கண்டனர்.

தமிழ் நாட்டிலே ஹிந்தி எதிர்ப்புப் போரில் இஸ்லாமியர்கள் பங்குபற்றவில்லையா? தாளமுத்து நடராஜன் போன்றுர்கள் வரிசையிலே எத்தனையோ இஸ்லாமியர்கள் உயிர் இழந்தனர்.

அவர்களுக்கு வங்க மொழிப் பற்று மாத்திரம்தான். ஆனல் நமக்கு இனப்பற்று மொழிப் பற்று இரண்டும் இருக்கின்றன.

இவைகளிலிருந்து நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். இஸ்லாமியர்களே தமிழ் அழிவதால் தமிழ் மாத்திரம் ஈழநாட்டிலிருந்து அழிந்துவிடாது. தமிழ்ப் பேசும் இஸ்லாமியர்களும் அழிந்துவிடுவார்கள்.

தகுந்த நடவடிக்கை எடுத்து தாய்மொழியையும் இனத்தையும் காப்பாற்றுங்கள். ஆங்காங்கே கண்டனக் கூட்டங்களைப் போட்டு அரசாங்கத்திற்கு எதிர்ப்பைக் காட்டுங்கள்.

எஸ். பி அபுபக்கர்,
9, அக்பர்ஸ் லேன்,
கொழும்பு-12
7—10—52

(3)

தாய்மொழியைக் காக்க முஸ்லிம் மக்கள் தக்க நடவடிக்கைகள் எடுப்பார்களாக" தங்கள் சென்ற வார இதழில் கண்டது இது. தமிழ் மொழிக்காகத் தலை கொடுக்கவும் தயார் என்று கூறுகின்றேன். என் உடம்பிலுள்ள ஒவ்வொரு நரம்புகளும் இதே பதிலைத்தான் சொல்லுகின்றன. எங்கள் தாய்மொழி அரபுதான். அரபை அலட்சியம் செய்து தேனினுமினிய தமிழ் மொழியைத் தாய் மொழியாக்கொண்டோம். அரபு மொழியை அலட்சியம் செய்து தமிழ் மொழியைக் கைக்கொண்ட நாங்களா சிங்களத்திற்கு அணைகேலுவது? கிடையாது. கனவிலும் கிடையாது.


நாங்கள் சிறு குழந்தையாய் இருந்தபோது எங்கள் அன்னையின் தீம்பாலைப் பருகி அவள் மடியில் மகிழ்ந்து கிடக்க அவள் எங்களைப் பாராட்டி கொஞ்சி முத்தம் வைத்துப் பேசியது தமிழ் மொழியிலல்லாமல் சிங்களத்திலல்ல. சீர்கெட்ட முஸ்லிம் சமுதாயத்தைச் சிறுகச் சிறுக மேலோங்க வைத்தது தமிழ் மொழியல்லாமல் சிங்களமல்ல. தங்கள் தாய்மொழியைக் கற்க வசதியில்லாமல் நாயினுங்கேடாய்க் கிடந்த முஸ்லிம் மக்களுக்கு வாழ வழி காட்டியது தமிழ் மொழியல்லாமல் சிங்களமல்ல! முஸ்லிம் மக்கள் கனவு காணும்போதும் கனவுலகில் கதைப்பதும் தமிழ் மொழியிலன்று சிங்களமல்ல. மதத்தைப்பற்றி மண்ணளவும் தெரிய மந்தையாய்க் கிடந்த முஸ்லிம் மக்களுக்கு மதத்தை ஆராய்ந்தறிவதற்கும் அடிகோலியது தமிழ் மொழியே. தமிழ் தத்துவ ஞானிகள் எத்தனைபேர் இஸ்லாத்திற்காகப் பாடுபட்டார்கள். இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டுத் தன் உயிரையும் தியாகம் செய்த காந்தி மகானைத்தான் மறக்கமுடியுமா? பாரதியைப் பாருங்கள்;

"பல்லாயிரம் பல்லாயிரம்
கோடி கோடி
யண்டங்கள்
எல்லாத் திசையிலுமோர்
எல்லையில்லா
வெளிவானிலே
நில்லாது சுழன்றோட
நியமஞ் செய்தருள்
நாயகன்
சொல்லாது மனத்தாலும்
தொடரொணுத
பெருஞ்சோதி
அல்லா. அல்லா. அல்லா.

என்று இஸ்லாமியர் வணங்கும் இறைவனைப் புகழ்ந்து இஸ்லாமியருக்கு உணர்ச்சியூட்டிய பாரதியைத்தான் மறக்க முடியுமா? யோகி சுந்தானந்த பாரதியைப் பாருங்கள் முஸ்லிம் சமுதாயத்திற்குப் புகழ்மாலை சூட்டி முகம்மது நபியின் வரலாற்றை வானளாவ வரைந்து கொட்டியிருக்கின்ருரே. இவர்களெல்லாம் தமிழ்த் தாய் ஈன்ற தவப் புதல்வர்கள்தானே, சிங்களவர்கள் எவராவது முஸ்லிம் சமுதாயத்தைப்பற்றிப் பேசியோ அல்லது எழுதியோ இருந்தால் அது இன்னலேயன்றி நன்மையாடல்ல

முஸ்லிம் சமுதாயத்தில் இலக்கியத்திலும் சரித்திரத்திலும் முதலிடம்பெற்ற நூல் சீருப் புராணம்தான் இதை இவ்வையகமே வாயார வாழ்த்துகின்றது. இந்நூலாசிரியரான உமருப் புலவர் தமிழ்க் கடலிலே குளித்த முத்துக்களைத்தான் சீருப் புராணமாகத் திரட்டியிருக்கிருர். இப்படிப்

(11-ம் பக்கம் பார்க்க)




## 'டெலிவிஷன் டெலிபோன்'



டெலிபோனில் பேசுகிறவர் எங்கிருந்தோ தன்னுடன் பேசிக்கொண்டிருப்பவரைப் பார்த்து கொண்டே பேசலாம். இவ்வருடத்தில் நடைபெற்ற பிரிட்டிஷ் பொருட்காட்சியில் இந்த டெலிபோன் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனக்குரல்

### இனத்துவேஷமா?

தீபாவளித் தினத்தன்று வெள்ளவத்தை கதிரேசன் கோவிலுக்கு சுவாமி தரிசனத்திற்காகச் சென்ற ஏராளமான தமிழர்கள் போக்குவரத்து வசதியின்றி தவிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. கோட்டைக்கும் கல்கிசைக்குமிடையே ஓடும் பஸ்ஸுகள் வெள்ளவத்தைக் கோவிலுக்கு பக்கத்திலுள்ள பஸ் நிறுத்தும் நிலையங்களில் அன்று நிறுத்தப் படாததினுல் தான் இத்தொந்தரவு ஏற்பட்டது. அந்த இடத்தில் இறங்க வேண்டிய பிரயாணிகளையுங்கூட வெகு தொலைவிலுள்ள நிலையங்களில்தான் இறக்கிவிட்டார்கள், இந்த பஸ்ஸுகள் "சவுத் வெஸ்டன்" கம்பெனியைச் சேர்ந்தவை.

தமிழர்களுக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்ற இயக்கத்தின் ஒரு பகுதிதானு இதுவுட? பஸ் தொழிலாளர்கள் வேண்டுமென்றே அவ்வாறு நடந்திருக்க முடியாது பஸ் கம்பெனி நிர்வாகிகளின் உத்தரவின் மீதே டிரைவர்கள் பஸ்களை அங்கே நிறுத்தாமல் சென்றிருப்பார்களென்பதில் சந்தேகமில்லை

ஆர். எம் செல்லதுரை.
கொழும்பு

### மந்திரியின் வாக்குறுதி எங்கே?

யாழ்ப்பாணம் சுன்னாகத்தைச் சேர்ந்த வள்ளுவ குலத்தவர்கள் மத்தியில் அரை குறையாகக் கிடந்து புழுத்து நாறும் சாக்கடை (கானே) பூர்த்தி செய்து உடுவில் குளத்திற்குக் கொண்டுபோய் விடுகிறேன் அல்லது அதனை மூடிவிடுகிறேன் என்று தேர்தலுக்கு முந்தி வாக்காளர்களிடம் பன்முறை வாக்களித்திருந்தார் பின்பு மக்கள் எல்லோரும் ஒன்றாகத் திரண்டு அவருக்கு ஓர் மகஜர் அனுப்பியிருந்தனர். ஆனுல் அவர் அதைப்பற்றி இப்பொழுது அக்கறை காட்டுவதில்லை. வாக்குறுதிகள் வழக்கப்போல் காற்றில் பறந்து விட்டதோ, அல்லது தந்தியில் பறந்துவிட்டதோ தெரியவில்லை.

வள்ளுவ குலத்தவர்கள்
சுன்னாகம்.

### பரிதாப முடிவு

சென்ற செப்டம்பர் மாதம் 9ம் திகதி இலங்கை கரையோரத்தில் 4 பாரத தேச பிரஜைகள் மூழ்கி இறந்தார்கள். இவர்கள் நிர்ப்பந்தமாக ராணுவத்தினராலோ, அல்லது இலங்கை வாசிகளான அந்த படகோட்டிகளாலோ நிர்ப்பந்தித்து தண்ணீரில் தள்ளப்பட்டனர் என்று உலவும் செய்தி உண்மையானுல் உடனே சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை யெடுக்குமாறு இலங்கை இந்திய அதிகாரிகளை கேட்டுக் கொள்கிறேன்.

அ வெள்ளையன்

சுதந்திரன்

194அ, தட்டாதெரு போன்: 3411

1952 ஒக்டோபர் மீ 26உ

# அரிசியும் ரப்பரும்

இலங்கைக்கு அரிசிவேண்டும் சீனுவுக்கு ரப்பர் வேண்டும். இந்த பரிமாற்றத்தை சிலர் ஆதரிக்கிறுர்கள். சிலர் எதிர்க்கிறுர்கள். வியாபாரிகளும் ரப்பர் தோட்ட முதலாளிகளும் அதிக விலைகொடுக்கும் எந்தத் தேசத்திற்கும் ரப்பரை விற்கத் தயார். உணவுப் பஞ்சத்தால் அடிபடும் மக்களோ குறைந்த விலைக்கு நல்ல அரிசியார் கொடுக்கிறுர்களோ, அதை வாங்கிச் சாப்பிடத் தயார்.

சீனுவுடன் ரப்பர்-அரிசி வர்த்தகஞ்செய்வதினுல் இதர உலக நாடுகளுடன் இதே பொருட்களை வர்த்தகம் செய்வதைவிட, வருடந்தோறும் இலங்கை சர்க்காருக்கு 920 லட்சம் ரூபாய் மிச்சம் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. இதனுல் மதிப்புமிக்க டாலரும் இலங்கைக்கு மீதப்படும். ஐந்து ஆண்டுகளுக்கு நிச்சயமாக அரிசி கிடைக்குமென்ற உத்தரவாதமும் வேறு இருக்கிறது

குறைந்த விலையில் அரிசி—அதிக விலையில் ரப்பர் விற்பனை—ரூ 9 கோடியே 20 லட்சம் மிச்சம்—டாலருக்குச் செலவில்லை—அரிசிக்கு உத்தரவாதம்—இத்தகைய சலுகைகளெல்லாம் கிடைக்கும்போது சீனத்து வியாபாரத்தை நிராகரிப்பது மதியீனமாகும் சீனு இந்த வர்த்தகத்தை அரசியற் கண்கொண்டு பார்க்கலாம், ஆனுல் நாம் அதில் தொங்கி நிற்கும் அரசியற் தன்மையை அருவித் துருவி ஆராய்ந்து பீதிகொள்ள வேண்டியது அவசியந்தானு?

சீனுவுடன் வர்த்தகம் செய்வது தற்போதைய நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு எவ்வளவு தூரம் உதவியாக இருக்கும் என்பதைத்தான் நாம்கவனிக்க வேண்டும். இந்தக கண்ணேட்டத்தில் பார்க்கும்போது சீனு—இலங்கை வர்த்தகம் இந்நாட்டின் தேசிய பொருளாதார வளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

சீனுவுடன் நீண்டகால வர்த்தக உடன்படிக்கையொன்று செய்வதால் மேற்கத்திய நாடுகளின், குறிப்பாக அமெரிக்காவின் நட்பை இழக்க வேண்டி வருமென்றும் அதனுல் அந்நாடுகளுடன் செய்யப்படும் வர்த்தகம் முழுவதும் பாதிக்கப்பட்டு நாம் எல்லாவற்றிற்கும் சீனுவையே நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுமென்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. அந்த நிலைமை ஏற்படுமாயின் அந்த நாடுகள்தான் அதற்கு முழுக்க முழுக்க ஜவாப்தாரிகளாவர் என்பதில் சந்தேகமில்லை ஏற்கனவே அமெரிக்கா சீனுவுடன் வர்த்தகம் செய்வதை ஆட்சேபித்திருக்கிறது. ஆனுல் இதுவரை இந்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கு அமெரிக்கா என்ன செய்துவிட்டது என்று கேட்கிறுேம். ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக நான்கு அம்சத் திட்டத்தின் கீழ் அமெரிக்கா உதவி செய்ததைப்போல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அது அளித்திருக்குமாயின், இலங்கை சீனுவின் உதவியை நாட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காதல்லவா? பொருளாதாரத்துறையில் உதவி செய்வதற்குப் பதிலாக அமெரிக்கா அதிக விலைக்கு அரிசியை விற்று குறைந்த விலைக்கு ரப்பரை வாங்கியது. இந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொண்ட சீனு, குறைந்த விலைக்கு அரிசியை விற்று அதிக விலைக்கு ரப்பரை வாங்க முன்வருகிறது. இதெல்லாம் உலக அரங்கில் அமெரிக்காவுக்கும் சீனுவுக்குமிடையே நடைபெறுகின்ற போட்டியின் விளைவுதான். இதனை இலங்கை பயன்படுத்திக்கொண்டு லாபம் பெறுகிறது. இதில் என்ன தவறு?

சீன வர்த்தகத்தின் விளைவாக மேலை நாடுகளின் பகைமையைத் தேடிக்கொள்வதோ, அவைகளுடன் நடைபெறும் வர்த்தகத்திற்கு குந்தகம் விளைவப்பதோ முற்றிலும் தவறுகும். அந்நிலை ஏற்படுமாயின் அதற்கு இலங்கை மந்திரி சபைதான் ஜவாப்தாரி என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் அம்மாதிரியான ஒரு விளைவை ஏற்படுத்தக்கூடிய அயல்நாட்டுக் கொள்கையை இலங்கை அரசாங்கம் இதுவரை அனுஷ்டித்து வந்திருக்கிறது. ஆதலால் கீழ்நாடுகளானுலும் சரி, மேலைநாடுகளானுலும் சரி, வேறு எந்த நாடுகளானுலும் சரி இலங்கையுடன் வர்த்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காங்கேசன்துறைத் தேர்தல் ஆட்சேபனை மனு

### புதிய குற்றச்சாட்டைச் சேர்க்க சுப்ரீம் கோர்ட் அனுமதி

கடந்த பொதுத் தேர்தலில் காங்கேசன்துறைப் பிரதிநிதியாக திரு எஸ் நடேசன் தேர்ந்தெடுக்கப்பட்டதை ஆட்சேபித்து சுப்ரீம கோர்ட்டில் திரு எஸ். ஜே. வி செல்வநாயகம் கியூ. ஸி. தாக்கல் செய்திருக்கும் தேர்தல் மனுவில் மேலும் ஒரு குற்றச்சாட்டைச் சேர்ப்பதற்கு நீதிபதி திரு ஸ்வான் அனுமதித்து தீர்ப்பளித்தார்

தேர்தலில் திரு நடேசன் தேர்தல் செலவு சம்பந்தமாக பொய்யான வரவு செலவு கணக்கு சமர்ப்பித்தது ஊழல் நடவடிக்கையாகும் என்ற குற்றச் சாட்டையும் தேர்தல மனுவில் சேர்க்க வேண்டுமென்பதே திரு செல்வநாயகத்தின் வேண்டுகோள். இதனை அனுமதித்து தீர்ப்பளிக்கும்போது நீதியரசர் கூறியதாவது;—

"சட்டப்பிரிவு 58 (1), எப்படி தேர்தல் செலவு சம்பந்தமாக தவறுன வரவு செலவு கணக்கு சமர்ப்பித்தல் ஊழல் முறையைக் கையாளுவதாகும் என்று கூறப்படுவதால், தேர்தல் செல்லுபடியாகாதெனக் கோருவதற்கு சட்டப்பிரிவு 77 (ஸி) யின்படி அது ஒரு காரணமாகும் என்று திரு குமாரசூலசிங்கம் (வாதியின பிரதம வழக்கறிஞர்) வாதிக்கிறுர்.

இது சரியான காரணமென்று தெரிகிறது. ஆனுல் திரு சிட்டி (பிரதிவாதியின் வழக்கறிஞர்) அப்புதிய குற்றச்சாட்டு தேர்தலில் கையாளப்பட்ட ஒரு ஊழல நடவடிக்கை அல்லவென்று கூறுகிறுர். ஒரு தேர்தல் செல்லுபடியாகாதென்று முடிவு செய்வதற்கு அது ஒரு காரணமாக முடியாதென்றும் அவர் எடுத்துக் காட்டுகிறுர்.

மேலும் பொய்யான கணக்குகளைச் சமர்ப்பித்தல் ஒருவர்மீது வழக்குத் தொடரக் கூடிய குற்றமென்றும், அதில் ஒருவர் குற்றவாளியாக்கப்பட்டால் அவர் பிரதிநிதியாக இருக்கும் பட்சத்தில் பாராளுமன்ற ஆசனத்தை அவர் இழந்து விடுவாரென்றும், ஆனுல் பொய்யான கணக்கு சமர்ப்பித்தல் என்பது தேர்தல் மனு ஒன்றின்மீது தேர்தலை செல்லுபடியாகாது என்று கூறுவதற்கு ஒரு காரணமாக இருக்க முடியாதென்றும் திரு சிட்டி விவாதிக்கிறுர்

பொய்யான கணக்கு சமர்ப்பித்தல் கிரிமினல் வழக்குத் தொடரக் கூடிய ஒரு ஊழல் நடவடிக்கையானுல், சட்டப் பிரிவு 77 (ஸி) யில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஊழல் நடவடிக்கையில் உட்படாத ஒரு குற்றச்சாட்டென்று இதை நான் கருத முடியாது"

திரு செல்வநாயகம் சார்பாக திருவாளர்கள் ஐஸதீன் மஹமத், ஏ. வைத்திலிங்கம், ஜி. டி. சமரவிக்கிரம ஆகியோரின் உதவியுடன் திரு ஸி. எஸ் பார்குமாரகுலசிங்கம் ஆஜராணுர் திரு நடேசன் சார்பில் திருவாளர்கள் வி. கே. பாலசுந்தரம், ஈ. ஆர். எஸ். ஆர் குமாரசாமி, என். நடேசன், ஸி ஸி ராசரத்தினம் ஆகியோரின் உதவியுடன் திரு ஜி. ஈ. சிட்டி ஆஜராணுர்.

திக்கொள்ள வேண்டும். அதற்கான ஒரு வெளிநாட்டுக் கொள்கையை இலங்கை அனுஷ்டித்தாலொழிய அந்த நிலைமை ஏற்பட முடியாது. ஆளுங் கட்சியிலே சாவதேசதந்திரஷ்டியுள்ள ராஜதந்திரிகள் இல்லாதிருப்பது இத்தகைய ஒரு அயல்நாட்டுக்கொள்கை உருவாகாமலிருப்பதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஆனுல் நமது அண்டை நாடான பாரத தேசத்தின் கொள்கையையாவது சிறிது பார்க்கக் கூடாதா? சீனு, ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளுடன் இந்தியா சரிநிகர்சமானமாக வர்த்தகம் செய்வதுடன், அதேமாதிரி அவைகளின் நல்லுறவையும் பெற்றிருக்கிறதே! இதற்கெல்லாம் காரணம் மாபெரும் உலக ராஜதந்திரியான பண்டித நேருவின் அயல்நாட்டுக் கொளகைதான். அம்மாதிரியான அயல்நாட்டுக் கொள்கையொன்றை ஏன் இலங்கை அனுஷ்டிக்கக் கூடாது? ஆனுல் நம் நாட்டு தலைகனத்த அரசியல்வாதிகளுக்கு இது எங்கே தெரியப்போகிறது?

சீன வர்த்தக உறவினுல் அடுத்த பொதுத்தேர்தலில் இலங்கையில் பொதுவுடமைக் கட்சி ஆதிக்கம் பெற்றுவிடும் என்று மிரட்டப்படுகிறது. இது வெறும் பிரமை. இதனுல் சீன அரிசியை வாங்க மறுத்துவிட்டால், லாபகரமான சீன அரிசியை வாங்க மறுத்த அரசாங்கத்தை ஒழித்துக்கட்டுவோம் என்று மக்கள் கிளம்பிவிடமாட்டார்களா? சீனத்து அரிசியினுல் இந்நாட்டில் கம்யூனிஸம் வளர முடியும் என்று கூறப்படுகிறது. அப்படியானுல் மேலை நாட்டு அரிசியினுல் முதலாளித்துவம்

# இந்தியத் தொழிலாளருக்கு இன்ஸூரன்ஸ் வசதியுமில்லை

## அதற்கு பிரஜாவுரிமை தான் காரணமாம்

சமீபத்தில் அமுலுக்கு வரும் தொழிலாளர் இன்ஸூரன்ஸ் திட்டத்தினால் 7 லட்சம் இலங்கை-இந்தியத் தொழிலாளர்கள் நன்மை பெற முடியாதென்றும் அவர்களுக்கு இலங்கையில் பிரஜாவுரிமை கிடைத்த பின்னரே இந்த வசதியும் கிடைக்கும் என்றும் தொழிலாளர் மந்திரி இவ்வாரம் கூறினார்.

தொழிலாளர் இன்ஸூரன்ஸ் திட்டம் அமுலுக்கு வரும் என்று கூறப்பட்ட போது இந்தியத் தொழிலாளர்கள் அதனால் அனுகூலம் பெறமாட்டார்களென்று கருதப்பட்டது. பின்னர் இந்தியத் தொழிலாளர்களுக்கு இந்த வசதி கிடைக்கக்கூடியதாக திட்டம் அமுல் நடத்தப்படும் என்றும் சொல்லப்பட்டது. இப்பொழுது பிரஜாவுரிமைப் பிரச்னையைக் கூறி இதற்கும் முட்டுக்கட்டை போடப்படுகிறது.

தொழிலாளர்களுக்குச் சம்பளம், ரஜா, வீட்டு வசதி, இன்ஸூரன்ஸ் முதலிய வசதிகள் கொடுக்கப்படுவது உழைப்பின் அடிப்படையிலேதான். பிரஜாவுரிமையின் அடிப்படையில் அல்ல. ஆனால் இப்பொழுது எதற்கெடுத்தாலும் பிரஜாவுரிமை ஆயுதமாகக் காட்டப்படுகிறது. இனிமேல் சம்பளம், போனஸ், லீவு முதலியவற்றை மறுப்பதற்கும் பிரஜாவுரிமையைக் காரணம் காட்ட ஆரம்பித்துவிட்டால் இலங்கை-இந்தியர்களின் கதி என்ன ஆவது?

### திருக்குறள் மாநாடு

கொழும்பில் நவம்பர் முதலாம் இரண்டாம் தேதிகளில் ஒரு திருக்குறள் மாநாடு நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது. இம்மாநாட்டில் தமிழ் நாட்டிலிருந்து டாக்டர் மா. இராசமாணிக்கம், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, க. அன்பழகன் ஆகியோர் கலந்துகொள்ளுகிறார்கள்.

### உணவுக் கட்டுப்பாடு

**கணக்கெடுப்பு தினம்**

**1952 நவம்பர் மீ 28-ம் திகதி**

தற்சமயம் வினியோகிக்கப்பட்டிருக்கும் 12-ம் தொடர் பங்கீட்டுப் புத்தகங்களுக்குப் பதிலாக புதிய சீக்கிரமான ஒரு திகதியில் வேறு ஒரு புதிய பங்கீட்டுப் புத்தகத்தை வழங்க உத்தேசம் செய்யப்பட்டிருக்கிறது. புதிய தொடர்ப் பங்கீட்டுப் புத்தகம் வழங்கப்படு முன்னால் 1952 நவம்பர் மீ 28-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கும் நள்ளிரவு 12 மணிக்குமிடையில் இலங்கை முழுவதிலும் ஜனத்தொகை கணக்கு எடுக்கப்படும்.

2 கூடிய சீக்கிரத்தில் குடியிருப்பாளர் ஜாபிதாக்கள் வினியோகிக்கப்படும். எல்லாப் பிரதம குடியிருப்பாளர்களும் இப்பாகங்களை குறிப்பிட்ட விதிகளின்படி உடனடியாகப் பூர்த்தி செய்து திருப்பி அனுப்புமாறு தயவாகக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

3 வேலைகாரணங்களை முன்னிட்டு வீட்டிலிருக்க முடியாதவர்களைத் தவிர்த்து ஏனைய எல்லா நபர்களும் கணக்கெடுப்பதற்கு வசதியாக நவம்பர் மீ 28-ம் திகதி மாலை 5-மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை தமது வீடுகளில் காத்திருக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தவறுபவர்களுக்கு பங்கீட்டுப் புத்தகம் பெறுவதில் அதிக வசதியீனங்கள் பின்னால் ஏற்படும்.

4 இதில் ஒத்துழைக்குமுகமாக முதலாளிமார்கள் அனைவரும், தம் வேலையாட்கள் சரியான நேரத்துடன் தம் வீட்டுக்குப் போய்ச் சேருவதற்கு உதவியாக நவம்பர் மீ 28-ம் திகதியன்று முன்னதாகவே, அதாவது பி. ப. 3 மணிக்கே தம் அலுவலகங்களை மூடிவிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இந்தத் தினத்தில் வசதிக்கு ஏற்றவாறு பொதுஜன போக்குவரத்து சேவைகளை, மாற்றிக் கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் ஏற்கனவே நடைபெற்று வருகின்றன.

1952 நவம்பர் மீ 28-ம் திகதி கொண்டாட்ட ஏற்பாடுகளில்லாமலிருப்பது பெரிதும் விரும்பத்தக்கது.

எம். எல். டி. கஸ்பெர்ஸ்
உணவுக் கமிஷனர்
(கட்டுப்பாடும் வினியோகமும்)
எடின்பரோ கிரெஸன்ட்
கொழும்பு 7
[illegible]

### தமிழ் நா வளர்ச்சி மன்றம்

கொழும்பு தமிழ் நா வளர்ச்சி மன்றத்தின் முதல் ஆண்டு நிறைவு விழா 19-10-52 ஸாகிரா கல்லூரியின் "கபூர் மண்டபத்தில்" ஜனாப் எஸ். எம். கமால்தீன் பி. ஏ. தலைமையில் சிறப்புடன் ஆரம்பமாகியது.

மன்றக் காரியதரிசி முதலாண்டின் அறிக்கை வாசித்த பின் தலைவர் "நா வளர்ச்சி" என்பது பற்றி பேசுகையில் தமிழ் தாயின் சிறப்பையும் இன்றைய நிலையையும் இளைஞர்களின் கடமையையும் பற்றி இனிமையாகப் பேசினார். அதைத் தொடர்ந்து ஜனாப்களான டி. எம். [illegible] நூர்தம்பி, எஸ். கியூவ் எ. ரஸாக், கே. வி. ஏ. தாஹிர், எஸ். டி. வெள்ளைத்தம்பி ஆகியோர் தமிழின் பெருமையையும் இளைஞர்களின் எதிர்காலத்தையும் பற்றி சொற்பொழிவாற்றினர்.

### அகில இலங்கை காந்தீய சேவா சங்கம்

அகில இலங்கை காந்தீய சேவா சங்கம் கொழும்பு கிளையின் வருடாந்தக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை, 53 மூர் ரோட்டில் திரு கு. நேசையா தலைமையில் நடைபெற்றது. புது வருடத்தில் செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றி ஆலோசிக்கப்பட்டபின் புது வருட நிர்வாகிகளாக திரு கு. நேசையா தலைவராகவும் திரு சோ. க. தம்பிப்பிள்ளை காரியதரிசியாகவும் திரு கே. பி. ஹரன் உபதலைவராகவும் திரு வ. கணபதிப்பிள்ளை தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# பர்மாவில் கரேன் ராஜ்யப் பிரிவினை

## நடைமுறைக்கு வருகிறது

இரண்டாவது உலகப் போர் முடிந்ததும், சம்பந்தமாய் ஏற்பட்ட அலுப்புத் தீருவதற்குமுன் ஆரம்பமான கரேன் ராஜ்யப் பிரிவினைத் தகராறு கலகமாக மாறி கடந்த மூன்று வருடங்களைத் தீர்த்திருக்கிறது.

இதற்கு ஒரு முடிவு காணும் ஏற்பாடு வேகமாய் நடக்கிறது.

பர்மிய அரசாங்கத்திற்கும் தலைமறைவாயிருக்கிற கரேன் புரட்சிக்காரர்களுக்குமிடையே சமாதானப் பேச்சு முடிவை நோக்கி நடந்துகொண்டிருக்கிறது.

இங்கிலையில் வெள்ளைக் கொடி ஏந்திய ஸ்டாலினிஸ்டுகளும், செங்கொடி ஏந்திய ட்ராட்ஸ்கியவாதிகளும் எல்லா புறங்களிலும் கலகம் செய்து வருகின்றனர். இவர்களை அடக்கும் [illegible] பர்மிய அரசாங்கம் இ[illegible] மாத முடிவில் தமது இராணுவ பலம் முழுவதையும் ஒரு முனைப்படுத்தும் எனத் தெரிகிறது.

பிடிக்கப்பட்டிருக்கும் கரேன் நாட்டில் 1000 பள்ளிகளை உடனடியாகத் திறக்கவும் கல்வி விருத்திக்கு வேண்டிய இதர ஏற்பாடுகளையும் செய்ய பர்மிய அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதாம்.

இந்த கரேன் நாடு 5 ஆயிரம் சதுர மைல் பரப்பைக் கொண்டதாயிருக்கும்.

### செவிடர்கள் கேட்க மூக்குக் கண்ணாடி!

நியூயார்க்,—

காது கேட்காதவர்கள் பலர் கேட்பதற்கான சாதனங்களை வைத்துக்கொள்ள வெட்கப்படுவதால் இப்போது ஒரு அமெரிக்க நிபுணர் [illegible] சக்தி வாய்ந்த [illegible] மூக்குக் கண்ணாடியைக் கண்டுபிடித்திருக்கிறார்.

ஒலிபரப்பிலே

# ஒரு நல்ல கலை விழா

**தியாகி**

நமது ரேடியோ ஸிலோன் தமிழ்ப் பகுதி நிகழ்ச்சிகள்பற்றிய விமர்சனத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று பல நேயர்கள் திரும்பத் திரும்ப நமக்கு கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி எழுதும் நேயர்களில் ஒருவர் 'எந்த நிகழ்ச்சியைப்பற்றித் தாங்கள் விமர்சனம் எழுதுகிறீர்களோ அந்த நிகழ்ச்சியை விடத் தங்கள் விமர்சனம் ரஸமாய் இருக்கிறது. அதனால்தான் கேட்கிறேன்' என்கிறார்.

ரேடியோ ஸிலோன் தமிழ் நிகழ்ச்சிகளைப் பற்றி விமர்சனம் எழுதுவது ஒன்றும் சிரமசாத்தியமான காரியம் அல்ல. ஆனால் விமர்சனம் எழுதுவதற்காக சில நிகழ்ச்சிகளை முற்று முடிவுறப் பொறுமையோடிருந்து கேட்க வேண்டியிருக்கிறதே, அதுதான் சில சமயம் அரிகண்டம் ஏறுவதைவிட அரிய காரியமாகிவிடுகிறது. எப்படியிருந்தபோதிலும் நேயர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டியது நமது கடன். எனவே எல்லா நிகழ்ச்சிகளையும் கேட்காவிட்டாலும் கூடியவரை விசேஷ நிகழ்ச்சிகளையாவது கேட்டு அவ்வப்போது விமர்சனம் செய்கிறோம்.

தீபாவளித் தினத்தையொட்டி கடந்த 17ம் தேதி இரவு 8 மணிக்கு ரேடியோ ஸிலோன் தமிழ் பகுதியினர் ஒரு கலை விழாவை நடத்தினர். இவ்விழா ரோயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்று அஞ்சல் செய்யப்பட்டது.

மொத்தத்தில் இக் கலை விழாவை 'ஒரு நல்ல கலை விழா' என்று பாராட்ட வேண்டும். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அந்தகரான திரு பி. தியாகராஜா என்பவர் தமது குரலினாலேயே வீணை மிருதங்கம், குழல் போன்ற வாத்தியங்களை அற்புதமாக இசைத்துக் காட்டினார். விழா நிகழ்ச்சிகளில் இந்நிகழ்ச்சி மிக உன்னதமாக விளங்கிற்று. 'இத்தகைய திறமைசாலிகள் பலர் எங்கெல்லாமோ மூலை முடுக்குகளில் மறைந்து கிடக்கிறார்கள். அவர்களையெல்லாம் மைக்கின் முன்னால் கொண்டுவர வேண்டும்' என்று நாம் பலதடவைகளில் அபிப்ராயப் பட்டதுண்டு. தியாகராஜா போன்றவர்கள் இன்னும் பலர் இருப்பார்கள். அவர்களையும் தேடிப் பிடித்து வந்து நேயர்களைத் திருப்திப்படுத்தினால் நிச்சயம் ரேடியோ ஸிலோன் அதிகாரிகளை ரஸிகர்கள் பாராட்டுவார்கள்.

திரு முத்துசாமியின் தயாரிப்பான கூட்டிய இசையும் நன்றாயிருந்தது.

திருவாளர்கள் சண்முகநாதனும் இரத்தினமும் ஹாஸ்யக் காட்சியொன்றை நடத்தினர். திரு இரத்தினம் மலையாளத்தானாக ஆரம்பித்து யாழ்ப்பாணத் தமிழைக் கலந்து 'கொழும்புத் தமிழில்' முடித்தார். அவருடைய சில சொற்பிரயோகங்கள்—மசாலவடை, பொத்தல் வடை பற்றி அவர் செய்த குறிப்புகள்—ஹாஸ்யம் கலந்தனவாய் இருந்தன. அவர் பாடிய பாட்டு ஏற்கனவே 'பாட்டு வாத்தியார்' நாடகத்தில் பாடிப் புளித்துப்போன பழைய சரக்கு. திரு சண்முகநாதன் கனரக, கண்ணியமான தமிழ் பேசி நடித்தார். தமிழ்சாகித்தியத்தோடு டோ, ரி, மி, பா, சொல்,

(12-ம் பக்கம் பார்க்க)

★

கமலா, லீலா பீடிகளும் பீடிக்குத் தேவையான நாகப்பூர், சிங்கறணி இலைகளும், ஆக்கூழ் நிதபாணிபுகையிலைகளும் சகாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

வி. பி. அவசியம் கவனிக்கப்படும்.

கமலா ஸ்டோர்ஸ்

Proprietor: S. V. பொன்னம்பலம்

15, செட்டியார் தெரு, கொழும்பு.

போன் 3597 தந்தி: காமரை

## கல்வியே கருந்தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ 'விஷப் பரீட்சை'

மூலம்: 'மாபஸான்' தமிழில்: வ. அ. இராசரத்தினம்

எல்லாச் சௌகரியங்களும் கூடிய தன் சிறிய படுக்கையறையிலே, பதிந்த மிருதுவான கட்டிலிலே, அழகான படுக்கை விரிப்புகளின் மத்தியில், புருஷனில்லாத பெண்ணுக்கிருக்கும் பூரண சுயேச்சையோடும், சகல சௌகரியத்தோடும் நித்யானந்தமான நித்திரையில் இன்னமும் ஆழ்ந்திருந்தாள் மார்க்குவிஸ.

வெளி வாசலிலே, ஆயாவுடன் யாரோ சம்பாஷித்துக்கொண்டிருக்கும் சப்தம் அவளின் சிங்கார அறையையும் தாண்டி அவள் காதுகளில் வந்து விழுந்தது. அவள் எழுந்தாள். அந்தக் குரல் தன் நெருங்கிய தோழியின் குரல் என்பதைச் சடடென்று விளங்கிக்கொண்டு, படுக்கையறைக் கதவைத் திறந்து, திரையையும் நீக்கி, மேகம் போன்ற தன் கூந்தல்கட்டுள் ஒளிர்ந்திருந்த தலையை ஆம் தலையை மட்டும் வெளியே நீட்டினாள். நீட்டியவள் 'இன்னும் ஒன்பது மணிகூட ஆகவில்லையே அவ்வளவு அவசரமாக அதிகாலையில் வந்திருக்கிறாயே; என்ன சங்கதி?'' என்று கேட்டாள்.

திகைத்த முகம் வெளிறிப் போயிருந்த 'பார்னெஸ்' 'ஆம; நான் உன்னுடன் பேச வேண்டும். ஓர் பயங்கரமான சம்பவத்தைப்பற்றிப் பேச வேண்டும்'' என்றாள் பதைபதைப் போடு

"சரி உள்ளே வா''

அறைக்குள் சென்ற இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டனர். மார்க்குவிஸ் தன் படுக்கையிற் திரும்பவும் உட்கார்ந்துகொண்டாள். உள்ளே வந்த பணிப்பெண் ஜன்னல்களைத் திறந்து, காலை ஒளியையும், இளங்காற்றையும் உள்ளே வரவிட்டாள். ஆயா போனபின் 'இப்போ சொல்லேன்'' என்றாள் மார்க்குவிஸ்.

பார்னெஸ் அழத் தொடங்கினாள்—பெண்ணின் சாகசத்தை அதிகப்படுத்துமே அதே கண்ணீர் தான்—சிவந்துவிடும் என்றஞ்சி அவள் கண்களைத் துடைக்கவில்லை. அழுதுகொண்டே "நான் பயங்கரமான—மகாபயங்கரமான நிலையில் இருக்கிறேன். இரவு முழுவதும் கண்ணோடு கண்மூடவில்லை என் நெஞ்சைத் தொட்டுப்பார்! எப்படி அடித்துக்கொள்கிறதென்று' என்று சொல்லிக்கொண்டே மார்க்குவிசின் கைகளைப் பிடித்து இருதயத்தில் என்ன இருக்கிறதென்பதை அறியவிடாமல் தனித்தனி பயங்கிடிக்கும் தன்கட்டுத் தளராத, அழகான மார்பிலே வைத்தாள். அவள் இதயப் பகுதியில் வேகமாக அடித்துக்கொண்டுதானிருந்தது! பார்னெஸ் தலையைத் தொடர்ந்தாள்.

நேற்றுப் பின்னேரம்; மணி நாலோ நாலரையோ இருக்கும்; என்றுத் திட்டமாகச் சொல்ல முடியாது. நான் என் சிங்கார அறையில் என்றைக்கும்போல இருந்துகொண்டு தெருவைக் கவனித்துக்கொண்டிருந்தேன். ஜன்னலைத் திறந்து வைத்துக்கொண்டு, தெருவிற் கண்ணோட்டம் விட்டுக்கொள்வதில் எனக்கு எப்போதும் ஓர் அலாதியான பிரீதி. நேற்றும் அப்படியேதான், எந்தவிதமான நோக்கமும் எண்ணமும் அற்று காற்றோட்டத்திற்காக ஜன்னலோரத்தில் இருந்தேன்.

அந்நேரம் எதிர்வீட்டிலே இன்னொரு பெண் ஜன்னலோரத்தில் இருப்பதை அவதானித்தேன். அவள் சிகப்புச் சட்டை போட்டுக்கொண்டிருந்தாள். நான் என் அழகான ஊதா நிறச் சட்டை யாடிருந்தேன். எனக்கு அந்தப் பெண்ணை ஏற்கனவே தெரியாது! அவள் புதிதாகத்தான் அங்கு வந்திருக்க வேண்டும். ஏற்கனவே நான் அவளை அங்கே காணவில்லை. ஆனால் எடுத்த எடுப்பிலேயே அவள் ஒரு.........

......அது என்ன என்பது உனக்குத் தெரியுந்தானே. முதலில் அவளும் என்னைப்போல ஜன்னலோரத்திலிருப்பதைக் காண எனக்கு அருவருப்பாகவே இருந்தது. ஆனால் நேரம் போகப் போக அவள் எனக்கொரு பொழுதுபோக்காக இருந்தாள். அவள் தன் முழங்கைகளை ஜன்னலில் ஊன்றிக்கொண்டு தெருவில் ஆள் பார்க்கிறதும் தெருவிற் போகிறவர்கள் அவளைப் பார்க்கிறதும்......... அவள் சைகை செய்வதும், அவர்கள் சம்மதிப்பதும் ............அவள் கண்கள் 'வாறியா?' என்று கேட்கும். அவர்கள் கண்கள் "இப்போது நேரமில்லை'' அல்லது 'இன்னொரு நாளைக்கு' அல்லது 'போகமாட்டாயா பிசாசே' என்றோ சொல்லும் இந்தக் கடைசிப் பதில் சொல்பவர்கள் அதிகமாக மணம் முடித்தவர்களாகத்தான் இருப்பார்கள். இந்த விளையாட்டை அவள் பேரம் பேசுவதைக் கவனித்துக்கொண்டிருப்பது ஓர் நல்ல பொழுதுபோக்காகவே எனக்கிருந்தது.

சிறிது நேரத்தில் அவள் தன் ஜன்னலை அடித்துச் சாத்தினாள். அப்போது யாரோ ஒருத்தன் தூண்டில் மீனைப்போல அவளோடு உள்ளே போனான். போனவன் பத்தோ பதினைந்தோ இருபதோ நிமிஷங்களின் பின்—ஆம் அதற்குமேல் இராது—திரும்பிவந்தான். இப்படியாக அந்த 'ஆள் பிடிக்கும் சக்தி'யின் ஆர்வத்தைக் கிளறிவிட்டது. இவ்வளவு வலுவாகவும் மெதுவாகவும் அவள்

தன்னை எப்படி அறிமுகப் படுத்திக் கொள்கிறாள்? அவள் யாரையும் பார்த்து விட்டபின் சைகை கொடுப்பது தலையினாற்றானா? அல்லது கைகளாலா? என் பதெல்லாம் எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. இதைத் தெரிந்து கொள்வதற்காக நான் என் நிலைக் கண்ணாடியை எடுத்து வைத்துக் கொண்டு அதில் அவளைக் கவனித்தேன். ஆம், அது மிகவும் இலகுவாகவே இருந்தது முதலில் ஒரு பார்வை, பின் ஒரு புன்சிரிப்பு, அதன்பின் 'வருகிறாயா? என்று கேட்கு முகமாக ஓர் மெல்லிய நாசுக்கான தலையசைப்பு. ஆனால் இந்த அங்க அசைவுகள் எல்லாம் மிகவும் நளினமாகவும், லாகவமாகவும், லளிதமாகவும், சமர்த்தாகவும் இருந்தன. இந்தக் 'கலை'யில் அவள் கைதேர்ந்தவள்!

இதைப்போல என்னாலும் செய்து கொள்ள முடியாதா, என்று நானே கேட்டுக் கொண்டேன்! ஒரு புன்சிரிப்பு, ஒரு மெல்லிய தலையசைப்பு இவ்வளவுதானே!! நான் நிலைக்கண்ணாடியின் முன்போய்நின்று கொண்டு அவளைப்போற் செய்ய முயன்றேன். ஆம், அந்தக் 'கலையை' நான் அவளைவிடத் திறமாகவே செய்தேன். அந்தத் திருப்தியோடு மறுபடியும் ஜன்னலோரம் வந்தேன்.

இந்த வழியாக வயிற்றைக் கழுவிக் கொள்வது எவ்வளவு பயங்கரமானது என்பது சிந்தித்துப் பார்த்தால் தெரியும். ஆனாலும் இது ஒரு பொழுதுபோக்குக்கூட. தெருவாற்சென்ற எத்தனையோ பேர்—வாலிபர்கள், வயோதிபர்கள், அழகர்கள், அவலட்சணங்கள், நரைத் தலையர்கள், தாடிக்காரர்கள்— இப்படி எத்தனையோ பேர் என் புருஷனைவிட, ஏன் உன் முதல் புருஷனைவிட—நீ தான் விவாகரத்துப் பண்ணியவளாயிற்றே—அழகாகவும் வசீகரமாகவும் இருந்தனர்.

அவர்கட்குச் 'சைகை' செய்தால் நான் மணமானவள் என்பதை அவர்கள் விளங்கிக் கொள்வார்களா? என்று யோசித்தேன் எனினும் நான் கற்றுக்கொண்ட 'கலையை' அரங்கேற்றத் துடித்தேன். அந்தத் துடிப்பு அடக்க முடியாத பலமான கோரமான துடிப்பாகவே இருந்தது. ஆம்: பெண்களாகிய நம் மனம் குரங்கு மனந்தான்! எங்கள் மூளையும் குரங்கின் மூளையும் ஒரே மாதிரியானதுதான் என்று ஒரு டாக்டர் கூடச் சொல்லியிருக்கிறார். நாங்கள் எப்போதும் இன்னமும் நேசித்துக் கொண்டிருக்கும் எங்கள் உணவறையோ அல்லது எங்கள் [illegible]

ஆத்ம துரவரையோ பேச்சிலும் செயலிலும் எண்ணத்திலும் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம்! நகைப்புக்கிடமான ஓர் பழக்கம் இது.

என்னைப் பொறுத்தவரையில் பாவச் சோதனையைத் தாங்கும் திராணி எனக்குக் கிடையாது!

எனவே என் கலையை எப்படியாவது பிரயோகித்துப் பார்க்கத் துணிந்துவிட்டேன். அதனால் என்ன தலை முழுகிவிடப் போகிறதா? முன்பின் பழக்கமில்லாத ஒருவனைப் பார்த்துச் சிரிப்பேன். அவனும் சிரிப்பான் அத்தோடு விஷயம் முடிந்துவிடும். ஒருவேளை அவன் என்னைப் புரிந்து கொள்ளமாட்டான். விளங்கிக் கொண்டால்கூட நான் மறுத்துவிடலாம்.........என்றெல்லாம் எனக்குள்ளே எண்ணிக் கொண்டேன்.

இப்படி எண்ணமிட்டுக் கொண்டே நான் ஒருவனை—ஆம் ஒரு அழகனை—எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். கடைசியாய் ஒல்லியாய் நீண்டு வளர்ந்த ஓர் அழகன் என் கண்ணில் பட்டான். எனக்கு அழகானவர்களைக் கண்டாலே பிடிக்கும் என்பது உனக்குத் தெரியுந்தானே! நான் அவனைப் பார்த்தேன் அவனும் என்னைப் பார்த்தான்! நான் அந்தக் கலையை அந்தப் புன்சிரிப்பை அந்த அங்க அசைவுகளை அவனில் பிரயோகித்தேன். அவனும் தலையை அசைத்துவிட்டு முன்வாயில் வழியாக உள்ளே வந்து கொண்டிருந்தான்.

அந்தக் கணத்தில் நான் எப்படி ஆனேன், என்பதை உன்னால் உணர்ந்து கொள்ள முடியாது என் தலை சுற்றியது! எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போல இருந்தது!! வந்தவன் என் கணவனின் சொந்த வேலைக்காரனான யோசேப்புடன் பேசிக் கொண்டிருந்தான். ஏற்கனவே எனக்கு அவனைத் தெரியும் என்றுதான் யோசேப் எண்ணிக் கொண்டிருப்பான்.

இந்த நேரத்தில் நான் என்ன செய்வது? சொல். நான் என்னதான் செய்வது? இன்னும் ஒரு நிமிஷத்தில் ஏன் ஒரு விநாடியில் அவன் வாசல் மணியையே அடித்துவிடுவான். என்னால் என்னதான் செய்ய முடியும்! ஓடிப்போய் அவன் என்னைப் பிழையாக விளங்கிக் கொண்டதாகச் சொல்லி அவனைப் போய்விடு என்று பிரார்த்திப்பதுதான் செய்ய வேண்டியது என்று எனக்குப் பட்டது. ஓர் ஏழைப் பெண்ணில் அவன் இரக்கங் காட்டுவான் என்று நான் நம்பினேன். அந்த நம்பிக்கையில் ஓடிப்போய் கதவைத் திறந்துகொண்டு 'நீர் பிழையாக எண்ணிவிட்டீர். நான் குடும்பப் பெண் உம்மை ஒத்திருந்த என் நண்பன் என்றுதான் உம்மை எண்ணினேன். பிழையைப் பொறுத்துக் கொண்டு போய்விடும்' என்று கதறினேன்.

அந்தப் படுபாவி என்னைப் பார்த்து நகைத்தான். என்னைக் கதை அளக்கிறே

[11-ம் பக்கம் பார்க்க]




## கட்டுரைப் பூங்கா

ஆசிரியர்: வித்துவான் திரு ஆ சிவலிங்கனார். கிடைக்குமிடம்: ஒற்றுமை ஆபீஸ், 8 வியாசராவ் தெரு தியாகராயநகர், மதராஸ்—17 விலை: ரூ. 1-8-0.

இப்பூங்காவில் பிரவேசித்தால் செந்தமிழ் மணம் கமழும் மலர்கள் பூத்துக் குலுங்கும் கட்டுரைச் செடிகளும் மரங்களும் அறிவுக்கு விருந்து ஊட்டுகின்றன. சங்க காலத்துச் சான்றோர், திருமூலர், கம்பர், குமரகுருபரர் முதலிய கல்வித் பெரியார்களின் செய்யுட்களால் அலங்கரிக்கப்பட்ட சிறந்த கட்டுரைகள் இந்நூலில் மிளிர்கின்றன.

நாணம் கற்பு என்ற இரண்டிற்கும் நிகழ்ந்த போராட்டத்தைத் "தரும சங்கடம்'' என்ற கட்டுரையில் சித்தரித்திருப்பது அற்புதமாக இருக்கிறது.

அனுபவ ரீதியாக எடுத்துக்காட்டு வாயிலாக சீரிய கருத்துக்களை உணர்த்தும் ஆசிரியரின் திறனை "நாயும் கலனும்'' என்னும் கட்டுரை படம் பிடித்துக்காட்டுகிறது. சேக்கிழார், கம்பர், திருத்தக்க தேவர், இளங்கோவடிகள் ஆகியோர் தீட்டிய நான்கு பாட்டுக்களின் கருத்தினை "பாட்டோவியம்' என்ற கட்டுரையில் ஓவியமாகத் தருவதை நன்கு சுவைத்து இன்பம் எய்தலாம் "விதியின் பிழை''யில் கம்பரை வள்ளுவருடன் இணைப்பது நூலாசிரியரின் கருத்தாழத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

பாக்களின் உரை பொருளை அனைவரும் சுலபமாக அறிந்து அகமகிழும் வண்ணம் எளிய நடையில் எழுதியிருப்பது பாராட்டத்தக்கது

இது ஒரு மறுமலர்ச்சி நூல் உயர்ந்த பதிப்பு. கவர்ச்சியான அட்டைப் படம்; சொல் வளம் நிறைந்த இக் கட்டுரைத் தொகுதியை அனைவரும் படித்து இன்புறலாம்.

## ஜீவஜோதி

ஆசிரியர்: எஸ. ஏ சோமசுந்தரம் கிடைக்குமிடம்: 5, நாட்டு வீராசசி முதலி தெரு, மைலாப்பூர், மதராஸ்—4 விலை: அணா 2.

இது ஓர் அரசியல் வாரப் பத்திரிகை. தனிப்பட்ட சில தலைவர்களைக் கண்ணியக் குறைவான சொற்களால் தாக்குவது பத்திரிகையின் முன்னேற்றத்திற்கு உதவி புரியாது.

விறுவிறுப்பான நடை சினிமா, மாணவர் முதலிய அம்சங்களும் சேர்க்கப்பட்டால், பத்திரிகை இன்னும் வளர்ச்சி அடையக்கூடும்.

## வரப்பெற்றோம்

பஞ்சா சாமயல் பரியா விலை டவழியனுப்புங்கள் இஸ்லாமியர்களே!

ஆசிரியர்: "மதனி (ஷாஜஹான்) வெளியீடு:-முஸ்லிம் முன்னேற்ற சங்கம், செனமெசபஸ்தியன, கொழும்பு—12 விலை: ——

—முகரா.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விஷப் பரீட்சை..............

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்தக் கதையெல்லாம் எனக்குத் தெரியும் நீ கல்யாணமானவள் அப்படியானால் ஒரு 'லூயிசு'க்கு பதிலாக இரண்டு லூயிஸ் அவ்வளவுதானே அது என்னிடம் ருக்கு பேசாமல் உள்ளே போக வழியைக் காட்டு" என்றான் நகைப்போடு

என்னை பேசவே முடியவில்லை. அவன் என்னைத் தள்ளிக்கொண்டே கதவை படித்துச் சாத்தினான். பின் என் இடையைக் கையால் சுற்றி வளைத்துக் கொண்டே என்னை முத்தமிட்டபடி என் சிருங்கார அறைக்கு இட்டுச் சென்றான். என் அறையை ஒரு முறை வலம் போட்டு வந்தவனைப்போலச் சுற்றிப்பார்த்துவிட்டு "இந்த அறை எவ்வளவு நல்லா இருக்கு, அந்த ஜன்னலோரத்திலிருப்பது உனக்குப் பொருத்தமாயில்லை" என்றான்.

நான் திருப்பவும் அவனை மன்றாடத் தொடங்கினேன். "போய் விடு; உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன் போய் விடு என் புருஷன் வந்துவிடுவார். நீ என்னைப் பிரியமாக வைத்துக் கொண்டால்"

"மெத்தப் 'டஸ்' பண்றியே. உன் புருஷன் வந்தால் அவனுக்கு அஞ்சு பிராங்க் கொடுப்பேன். அவன் போய்க் குடிச்சுட்டுக் கிடப்பான்" என்றான் அவன்.

அந்நேரம் என் கணவனின் படம் அவன் பார்வையிற்பட்டது. "இதுதானா உன் புருஷன்" என்றான்.

"ஆம்"

"முட்டாள்போல இருக்கானே இது யாரு உன் கூட்டாளியா" என்றான் உன்னுடைய போட்டோவைக் காட்டி.

"ஆம்"

"குட்டி நல்லாயிருக்காளே. அவளை எனக்கு அறிமுகப்படுத்தணும்" என்றான் அவன்.

கடிகாரம் ஐந்து மணி அடித்தது. வழக்கமாக என் புருஷன் ஐந்தரைக்கு வந்துவிடுவார் இன்று சிறிது முன்னதாகவே வந்துவிட்டால்.........என் தலை சுற்றியது...... எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவனை எப்படியாவது போகச் செய்யவேண்டும். எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகப் போகச் செய்யவேண்டும். எப்படி.........? அவனைக் கெதியாக அனுப்பி வைக்க வழி.........? நான் அவனைக்கெதியாகவே அனுப்பிவிட்டேன்!! வேறு ஒரு வழியுமே எனக்குப் புலப்படவில்லை அந்த வழியும் இல்லாவிட்டால் அவன் போயிருக்கமாட்டான்!! அவன் போனபின் நான் கதவை மூடிக்கொண்டேன். அவ்வளவுதான்

மார்க்குவிஸ் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டே கட்டில் குலுங்கும்படியாக 'இடி இடி' என்று சிரித்தாள் சிரிப்பு அடங்கியதும் "அவன் அழகாயிருந்தானா?" என்று கேட்டாள்.

"ஆம்; நல்ல அழகன்"

"அப்படியானால் ஏன் குறைப்பட்டுக்கொள்கிறாய்?"

'அவன் இன்றைக்கும் நேற்றைய நேரத்திற்கு வருவேன் என்று சொல்லிப் போயிருக்கிறான். அவனுக்கு எவ்வளவு துணிச்சல் இப்போ என்ன செய்வது?

"அவனைக் கைது செய்"

"என்ன கைது செய்வதா? என்ன குற்றத்திற்காக? எப்படி?

"அது மிகவும் இலேசான காரியம்; நீ போலீஸுக்குப் போய் அவன் மூன்று மாதமாக உன்னைச் சுற்றிக்கொண்டு வருவதாகவும் நேற்றுத் தனிமையாக இருக்கையில் உன்னை வந்து பயமுறுத்தியதாகவும் இன்றைக்கும் வருவேன் என்று சொல்லிப் போயிருப்பதாகவும் முறைப்பாடு பண்ணி இரண்டு போலீஸ்காரரை அனுப்பும்படி கேள்"

"அவன் உண்மையைச் சொன்னால்......"

"சை, அவனை எவரும் நம்பமாட்டார்கள். நீ நல்ல நிலையில் இருக்கும் குடும்பப் பெண் நீ சொல்வதைத்தான் எல்லாரும் நம்புவார்கள்"

"நான் நம்பவில்லை அப்படி"

"அப்படியாயின் உனக்குத்தான் கஷ்டம்"

"அவன் பிடிப்பட்டால் என்னைப் பற்றி என்ன சொல்வான்"

"அவன் சொல்வது கிடக்கட்டும்; அவன் கட்டாயம் தண்டிக்கப்படுவான்

"எப்படித் தண்டிப்பார்கள்?

"உனக்கு நஷ்ட ஈடு கொடுக்க ஆம்; நீ இரக்கம் காட்டாவிட்டால் இப்படி வழக்கில் அதுதான் தீர்ப்பு"

"நஷ்ட ஈடு; இப்போது தான் ஞாபகம் வருகிறது. அவன் படுக்கையிலே இரண்டு லூயிசைப் போட்டு விட்டுப் போயிருக்கிறான். அந்த.........

"இரண்டு லூயிசா?

"ஆம்"

"அவ்வளவுதானா?

"ஏன்; அது அதிகமாயில்லையா?

'அது அவ்வளவு அதிகமில்லை'

"அந்தக் காசை என்ன செய்யட்டும் மார்க்குவிஸ் சிறிது நேரம் யோசித்து விட்டுச் சொன்னாள் அந்தக் காசைக்கொண்டு உன் புருஷனுக்கு ஏதாவது ஒரு பரிசுப் பொருள் வாங்கிக் கொடு

---

## தமிழ் மொழிக்காக...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பலதுறைகளிலும் மானிட சமுதாயத்தில் இஸ்லாம் சமயத்திற்கும் ஓர் இடம் பெறச்செய்த தமிழ்மொழிக்கு என்றும் தஞ்சம் கொடுப்பதுதான் இஸ்லாமியரின் கடன். இன்னும் தமிழ் மொழியினூடாக எத்தனையோ முஸ்லிம் இளைஞர்கள் தலைப்படுகின்றார்கள் திருச்சி ரசூல், ரஹீம்போன்றவர்கள் இந்தியாவின் தலைசிறந்த தமிழ் எழுத்தாளர்களாகத் திகழுவதன்காரணமென்ன? தன்னலங் கருதாத தமிழ்த் தாயூட்டிய அறிவுப் பால்தான்.

தமிழ் மொழியைக் குழி தோண்டிப் புதைக்க நினைப்போரையும் குற்றுயிராய் விடமாட்டோம். எங்கள் இன்பம் துன்பம் எல்லாம் தமிழ்மொழிதான் அடிமை அரசாங்கப் பதவிக்காகத் தமிழ் மொழியை அலட்சியம் செய்து சிங்கள மொழியைக் கைக்கொள்ளும் இஸ்லாமியர் இஸ்லாமசமுதாய முட்டுக்கட்டைகள் மதத் துரோகிகள் என்றும் கூறலாம். இன்றைய முஸ்லிம் இளைஞர்களின் இதயத்தில் தமிழ்த்தாய் பாய்ச்சிய வீர ரத்தம் இன்றும் ஓடுகின்றது. யு என் பி.க்கு வால் பிடிக்கும் இஸ்லாமிய பிரதிநிதிகளும் இஸ்லாமிய இளைஞர்களுடன் சேர்ந்து தமிழ் மொழிக்காகப் பாடுபடுவார்களாக.

ஏ ஆர். எம். இல்யாஸ்
மட்டக்களப்பு.

---

## உணவுக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

### இறக்குமதி அரிசி கையிருப்பு

ஹோட்டல்கள், இளைப்பாற்றி விடுதிகள், கபேக்கள், உணவுச்சாலைகள் முதலியன இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை பாகம் செய்யப்பட்ட நிலைமையிலேனும் வைத்துவிற்பனவு செய்வது 1952 நவம்பர் 1-ம் திகதி முதல் அனுமதிக்கப்படமாட்டாதென அறிவிக்கப்படுகிறது. அப்படி வைத்திருந்தால் அந்தக்கையிருப்பு, உணவு வினியோகச் சட்டத்தின் படி பறிமுதல் செய்யப்படும். பறிமுதல் செய்யப்பட்ட அரிசிக்கு கட்டுப்பாட்டு விலைப்படி, அதாவது கொழும்பில் கொத்து ஒன்று 25 சதப்படி பணம் கொடுக்கப்படும்.

எம் எல். டி காஸ்பெர்ஸ்
உணவுக்கட்டுப்பாட்டதிகாரியும்
உணவுக் கமிஷனரும்
(உணவு வினியோக சட்டத்தின் கீழ் அதிகாரம் பெற்றவர்.
கொழும்பு 8. 10. 52

---


## மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ 10-0-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 13-0-0 (தபால் செலவு தனி)

## கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 15-0-0 ஜெல்லி விலை ரூ. 8-8-0 (தபால் செலவு தனி)

சிலோன் ஏஜண்ட்: New Colombo Medical Stores, 82, Main St. Colombo 11
M/grs: SEENU & CO., POST BOX. 1638. MADRAS 1
பிராஞ்ச்: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.



அன்புள்ள ஐயா!

தாங்கள் அனுப்பிய எஸ். பி எஸ் பதிமருந்தால் சகல வியாதிகளிலிருந்தும் பூரண சுகமடைந்தேன். மற்றும் பலர் இம்மருந்தினால் நல்ல சுகமடைந்திருக்கிறார்கள்.

ஆகையால் இம்மருந்தை உற்பத்தி செய்பவர்களுக்கும், தங்களுக்கும் எனது நமஸ்காரம்.

இப்படிக்கு,
எஸ் சொள்ளமுத்து கங்காணி
விக்லோ ஹில்ஸ்,
போவிட்டிய மல்லே டிவிஷன்,
வண்டுரம்பை போஸ்ற்று. 17-6-52.




இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றது

## எஸ். பி. எஸ். பதி மருந்து

### இதனால் தீரும் நோய்கள்

ஜுரம் தலைபாரம் தலைவலி தலைசுற்றல் சளி இருமல் க்ஷயம் அஜீரணம் அஜீரண வயிற்றோட்டம் புளியேப்பம் மந்தம் வயிற்றுப்போக்கு வயிற்றிரைச்சல் வயிற்றுவலி வயிற்று உப்பிசம் பசியின்மை வாய் நாற்றம் இழுப்பு ஜன்னி காக்கைவலிப்பு பித்தரோகம் பெலவீனம் அசதி காமாலை கைகால் பிடிப்பு பாரிசவாய்வு அண்டவாய்வு குத்தல் எல்லாவித வாதரோகங்கள் பிளேக் காலரா இன்புளுயன்சா ஸ்திரீகளுக்கு உண்டாகும் சூதகவாய்வு சூதகஜன்னி சூலைக்கட்டு குழந்தைகளுக்கு மாந்தம் வயிற்றோட்டம் ஜன்னி, ஜலதோஷம் கக்குவான், இருமல் இவைபோன்ற சகல வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து.

இந்த ஒரே மருந்து சகல வியாதிகளையும் குணமாக்குகிறது. உள்ளும், புறமும் உபயோகிக்கலாம். ஒவ்வொரு புட்டியிலும் உபயோக விபரம் அடங்கியிருக்கிறது.

**இம்மருந்தை லட்சக்கணக்கானமக்கள் உபயோகித்து சுகமும், சுபீட்சமும் பெற்றுள்ளனர்.**

குறைந்த விலை! நிறைந்த குணம்

**புட்டி 1க்கு ரூ.1-25.** தபால் செலவு வேறு

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

கவனிப்பு:- எங்கள் எஸ் பி. எஸ். பதிமருந்து வாங்குபவர்கள் ஏழு முகமுத்திரை இருக்கிறதா என்று கவனித்துப்பார்த்து வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தயாரிப்பவர்கள்:- எஸ். பி. எஸ். ஜெயம் அன் கோ,
வேல் கெமிக்கல் ஒர்க்ஸ், மதுரை

இலங்கை சோல் ஏஜண்டுகள்:-
எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ,
34, செட்டியார்தெரு, கொழும்பு 11
ஹெட் ஆபீஸ்:- 193, காலி ரோடு, கொள்ளுப்பிட்டி கொழும்பு (3;
Telephone: 6019
Telegram: Jayajeevi, Colombo.



CHANDANAS with MUSK
VITAMIN "B" ELIXIR FREE FROM ALCOHOL
COOLING & REFRESHING

## கஸ்தூரி சேர்த்த சந்தனாசவம்

விட்டமின் 'பி' அடங்கிய சுகபானம் சிறந்த மைசூர் சந்தனம் மத்தியதானி கனிவகை. சுதேச மூலிகை சேர்த்து தயாரிக்கும் ரசபானம் ருசியாகவும் இனிமையாகவும் குணமாகவும் இருக்கும்.

காசம், க்ஷயம், லயரோகம், குடல்நோய், வாதபித்த சிலேட்டுமம், மூத்திரநோய் சூடு, குஷ்டம், சக்திக் குறைவு, தாது நஷ்டம், சொப்பனம் ஸ்கலிதம் இவைகளுக்கு ஆண் பெண் யாவருக்கும் ஒரே மருந்து. பத்தியமில்லை. வேளைக்கு 2 முதல் 4 மேசைக் கரண்டிவரை சாப்பாட்டுக்கு முன் பின் படுக்கைக்கு முன் குடிக்கவும்

பெரிய போத்தல் தபால் செலவுடன் ரூ 5-50

RAHMANIA MEDICAL STORES
DEMATAGODA, COLOMBO.
Phone: 91855.



# வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசியற் குஸ்தியில் இரகசியங்கள் அம்பலம்

## தன்னம்பிக்கை மிகுந்த தளபதி "ஐக்"

அமெரிக்க அரசியல் கோதாவிலே அடுத்த ஜனாதிபதி யார் என்பதை நிர்ணயிக்க ஒரு பெரிய மல்யுத்தம் நடைபெறுகிறது குடியரசுக் கட்சியின் மல்லர்தான் ஐஸன்ஹவர். அவருடன் ஜனநாயகக் கட்சியின் அபேட்சகர் ஸ்டீவன்ஸன் போட்டியிடுகிறார். இந்தப் போட்டியில் ஒருவர்மீது ஒருவர் அரசியற் சேற்றை அள்ளி வீசுகின்றனர் இதனால் இதுவரை மறைத்து வைக்கப்பட்டிருந்த பல ராணுவ ரகசியங்கள்கூட அம்பலத்திற்குவர ஆரம்பித்துவிட்டன.

தனது போட்டி அபேட்சகரான ஸ்டீவன்ஸனை மண் கவ்வும்படி செய்துதான் ஜனாதிபதி பதவியை கவ்விக் கொள்ளுவதுதான் இன்று ஐஸன்ஹவர் முன்னிலையிலிருக்கும் முக்கிய கடமையாகும்



"ஐக்"

### "ஐக்"

'ஐக்' என்பது அவரது செல்லப் பெயர். அவருடைய செல்வாக்கு ஓங்கி வளர்வதற்கு இந்த அழகியபெயரும் ஒரு காரணம்

### சமாதானத் தளபதி

அவருடன் நெருங்கிப் பழகும் ஐரோப்பிய தளபதிகள் "சமாதானத் தளபதி" "யுத்தத்தை விரும்பாத தளபதி" "அரசியற் தளபதி" என்றெல்லாம் அவரை வர்ணிக்கிறார்கள். அவரது குடும்பத்தினர் யுத்தத்தைஎட்டிக்காயென வெறுப்பவர்கள்.

அவருடைய தந்தை ஜேகப் ஐஸன் ஹவர் மத நம்பிக்கையில் உறைந்துபோன ஒரு பாதிரியார். தாய்தந்தையர்கள் மத அடிப்படையில்தான் யுத்தத்தை எதிர்த்து வந்தார்கள்.

### ஆச்சரியம்

வாலிப வயது அடைந்ததும் ராணுவத்தில் சேரப் போவதாகக் கூறி முழுக் குடும்பத்தையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்துவிட்டார். தாய்தந்தையர்கள் மகனின் ஆவலுக்கு அணைபோடவில்லை.

அவர் எதற்கும் தலை குனிந்து போகாமல், எடுத்த காரியத்தை நிறைவேற்றுவதில் இணையற்ற திறன்பெற்று விளங்குவதற்குக் காரணம் தன்னம்பிக்கை அளவுக்குமீறி அவரிடம் குடிகொண்டிருப்பதுதான்.

ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா ராணுவ, பொருளாதார உதவி அளிப்பதை பலமாக ஆதரிக்கும் இந்த மாபெரும் தளபதி அயல் நாடுகளில் அமெரிக்க ராணுவத்தை நிறுத்துவதில் பெரிதும் ஆர்வம் காட்டுகிறார். ஆயினும் அதற்கெல்லாம் ஒரு எல்லை இருக்க வேண்டுமென்பது அவர் கருத்து. "எங்கேயோ இருக்கும் நாடுகளின் எல்லைகளைப் பாதுகாப்பதற்கு நமது ராணுவத்தை உபயோகப்படுத்தும் ஒரு புதிய ரோமாபுரியாக அமெரிக்கா இருக்க முடியாது" என்று அவர் பகிரங்கமாகக் கூறுகிறார்.

### சிப்பாய்

ஐக் ஒரு திறமையான சிப்பாயாக இருப்பினும் சாதாரண எளிய வாழ்க்கைதான் நடத்துகிறார்கள். ஆரம்ப காலத்தில் அவர் சிப்பாயாக இருக்கும்போது அவருக்கு கொடுக்கப்பட்ட வேலை டாங்கிகளை ஓட்டுவதுதான். பின்னர் ஆகாய விமான ஓட்டியாக வேலை பார்த்தார்

2வது உலக யுத்தத்தில் ஜப்பானியர் 'பர்ல்' துறைமுகத்தைத் தாக்கும்போது அவர் ஓர் பட்டாளத்தின் தலைமையை ஏற்று போரணிக்குச் சென்றார் 1942 ஜூனுக்குப் பின்னர் அவர் ஐரோப்பாவிலிருந்த அமெரிக்கச் சேனைக்குப் பிரதம தளபதியாக அனுப்பப்பட்டார்.

### ராணுவத்தலைமை

இத்தாலி, சிஸிலி, ஆப்பிரிக்கா ஆகிய இடங்களில் அவருடைய தலைமையின் கீழ் நேச நாட்டுப் படைகள் போராடின. பின்னர் அவர் நாஜிப்படைகளை பிரான்ஸ் வழியாக விரட்டிக் கொண்டுபோய் பலமாகத் தாக்கி அவர்களைக் குற்றுயிராக்கினார், 1945ல் அவர் பிரதம சேனாதிபதியாக நியமனம் செய்யப்பட்டார்.

இப்பொழுது அந்தப் பதவிக்கும் கல்தா கொடுத்துவிட்டு ஜனாதிபதி பதவியைப் பிடிக்க பிரம பிரயத்னம் செய்கிறார்.

### மாவ், மாவ் பயங்கரம்

நைரோபி—

இவ்வருட ஆரம்பத்தில் எடின்பரோ கோமகன் இங்கு விஜயம் செய்தபோது போலோ விளையாடிய கிளப்பை, (உல்லாச பொழுதுபோக்கு சங்கம்) மாவ் மாவ் ரகசியக் கூட்டம் ஒன்று பொசுக்கிச் சாம்பலாக்கிவிட்டது.

### கள்ளிப்பட்டு பகுத்தறிவு சங்கம்

இராமநாதபுரம் மாவட்டம் கள்ளிப்பட்டு பகுத்தறிவு சங்கத்தின் விசேஷித்த பொதுக் கூட்டமொன்று, கடந்த 15-10-52ல் திரு ஏ. எம். டி. சாமி தலைமையில் கொள்ளுப்பிட்டியில் கூடியது கூட்டத்தினரை வரவேற்று திரு பி. பெரியசாமி பேசுகையில் மேற்படி சங்கம் தோன்றி இருபது வருடங்களுக்கு மேலாகியும் அத[illegible] துவக்கப்பட்ட பல ஆக்க வேலைகள் இன்னும் பூர்த்தியடையாதிருப்பது மிகவும் துக்கிக்கத் தக்கதென்றும் இனிமேலாவது அங்கத்தவர்களும் நிர்வாகிகளும் விழித்தெழுந்து அதனை நிறைவேற்றி வைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

திருவாளர்கள் எஸ். கே. ஜெகநாதன் ஏ கருப்பையா கே. எம். அறிவாளன், ஆர். எஸ். பொன்னம்பலனார் ஆகியோர் கூட்டத்தில் பேசினார்கள் பின்னர் கீழ்கண்டவர்கள் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: மு சி பழனிவேல் பொதுச் செயலாளர்; பி. பெரியசாமி பொருளாளர்: கோ. வெ. கருப்பையா உதவச் செயலாளர்: அ. வேலு.

வட இந்திய ஹாஸ்ய நக்ஷத்திரம் "கோப்' பின் வரலாறு அடுத்த வாரம் வெளிவரும்

### ஒரு நல்ல.........

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

லா, ஸீ, டோ என்ற மேல் நாட்டு சுரங்களை அமைத்து இனிமையும் சுரலயமும் குன்றாமல் பாடியபதுவெறும் ஹாஸ்யம் என்று சொல்வதற்கில்லை அதில் பாராட்டற்குரிய திறமையும் காணப்பட்டது. இந்த சரக்கை முன்பும் ஒரு கலைவிழாவில் திரு சண்முகநாதன் அவிழ்த்துவிட்டிருக்கிறார் என்று ஒரு நண்பர் சொல்கிறார். ஆனால் நாம் அதை முன்பு கேட்கவில்லை.

முடிவில் முதலியார் பொன்னம்பலத்தின் "எங்கள் திருநாடு, ஈழவளநாடு" என்ற பாடலில் சில அடிகள் பாடப்பட்டன மிகப் பொருத்தமான ராகத்தில் மிக இனிமையாக இருந்தது அப்பாடல் பல்லுடைக்கும் இலங்கையின் தேசிய கீதத்திற்குப் பதிலாக இதை [illegible] தமிழர்கள் பாடினால் நன்றாயிருக்கும்.




### சென்ட்ரலில் மாப்பிள்ளை

சிங்காரியைத் திரை உலகுக்களித்து சினிமா விசிறிகளின் பாராட்டுதலைப்பெற்ற நேஷனல்புரொடக்ஷன்ஸார் தமது அடுத்த வெளியீடாக 'மாப்பிள்ளை' என்ற சமூகக் கதையை வெள்ளித்திரைக்களித்துள்ளார்கள். இப்படம் இப்போது நகரின் முதலாவது டிவிஷனிலுள்ள சென்ட்ரல் படமாளிகையிலும் அதைச் சேர்ந்த மற்றும் வெளியூர் படமாளிகைகளிலும் திரையிடப்படுகிறது.

மேனாட்டுப் பாணியைப் பின்பற்றி சிங்காரி திரைக்கதையையும் வசனத்தையும் அமைத்த வி. என். சம்பந்தமே மாப்பிள்ளைக்கான கதை வசனத்தையும் எழுதியுள்ளார். கதையில் சில அசம்பாவிதமான கட்டங்கள் மட்டும் இல்லாதிருந்தால் மாப்பிள்ளைத் திரைக் கதை சிங்காரியை விட பலமடங்கு சிறந்ததாய் இருந்திருக்கும். மற்றப்படி மாப்பிள்ளையில குறை சொல்லக்கூடிய அம்சம் ஒன்றுதானும் இல்லை

குறுகுறுக்த பார்வையும் துடிப்புமுள்ள பி. கே. சரஸ்வதி நளினியாகத் தோன்றி குற்றம் சொல்ல முடியாதவண்ணம் நடித்திருக்கிறார். ராஜப்பாவை விட இப்படத்தில் இவர் நடிப்பில் அதிக முன்னேற்றம் காணப்படுகிறது. மற்றும் டி. ஆர் ராமச்சந்திரன் டி கே. ராமச்சந்திரன், நரசிம்மபாரதி பி. எஸ் வீரப்பா, எம். சரோஜா, வி எஸ் பாண்டியன், எம் எஸ் பாக்கியம், ராதாகிருஷ்ணன் காந்தம், லக்ஷ்மி, லெக்ஷ்மி பிரபா ஆகியோர் அவரவர்க்குக் கொடுக்கப்பட்ட பாத்திரங்களை உணர்ந்து நன்றாக நடித்துள்ளார்கள். வி எஸ் பாண்டியன் எம் எஸ் பாக்கியத்தோடு தோன்றும் கட்டங்களில் அவருடைய நடிப்பு கலைவாணர் என். எஸ் கிருஷ்ணனை நினைவூட்டுகிறது.

வனசுந்தரி, சிங்காரி போன்ற பல படங்களை டைரெக்ட் செய்த டி. ஆர். ரகுநாத் இப்படத்தின் டைரெக்ஷன் பொறுப்பை ஏற்றிருக்கிறார்

தஞ்சாவூர் ராமையாதாஸின் பாட்டுகளுக்கு பி. லீலா, ஜிக்கி, கோமளா, ரத்னமாலா, ஜபசுதேவன் ஆகியோர் குரல் கொடுத்துள்ளார்கள்.

மாப்பிள்ளை நல்ல அம்சங்கள் நிறைந்த பொழுதுபோக்குப்படமென்று சிபார்சு செய்து வைக்கிறோம்.

எஸ். ஆர்

### தனிப்பல்கலைக...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பு வெட்டுண்டு போய்விட்டதா? ஆகவே இலங்கையில் தமிழர் பிரதேசத்தில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவி தமிழ் சமூகம் முன்னேற வழி பெறாதுபோமேயொழிய தமிழர்களுக்கும் மற்றவர்களுக்குமுள்ள தொடர்புக்குப் பங்கம் ஏற்பட முடியாது.

செனட்டரின் பிரசங்கம் முற்றிலும் துஷ்பிரசாரமாகும். யு. என். பி. பி.யின் விஷமப் பிரசாரத்திற்கு அவர் சப்பைக்கட்டுகட்டுகிறார். ஆனால் அநேக சமயத்தில் அக்கிளர்ச்சி பொது ஜனக் குரலாகக்கூடும் என்றும் கூறுகிறார். அது ஏற்கனவே மக்கள் குரலாகி விட்டது என்பதுதான் அதன் அர்த்தம்.


## அரிய தமிழ் நூல்கள்

| | |
|---|---|
| 18 சித்தர் ஞானக்கோவை மூன்று பாகங்கள் | 3-50 |
| பட்டினத்தார் பாடல் திரு வி. க. விருத்தியுரை | 4-00 |
| கந்தபுராணச் சுருக்கம் அழகிய வசனநடை கவர்ச்சியான கலர் டைட்டிலுடன் | 1-50 |
| கதிர்காமம் இலங்கையில் பிரதான குகக்ஷேத்திரமாகிய கதிர்காம வரலாறும் தோத்திரத் திரட்டும் படங்களுடன் | 2-00 |
| கைவல்யநவநீதம் உரையுடன் கிளேஸகாகிதம் அழகிய கலிகோ பைண்டு | 3-0) |
| கந்தரலங்காரம் உரையுடன் | 1-25 |
| கந்தரனுபூதி உரையுடன் | 1-25 |
| திருமுருகாற்றுப்படை உரையுடன் | 1-25 |
| தேவிபராக்கிரமம் தேவியின் 64 அவதாரங்களைப் பற்றிய விரிவான நூல் படங்களுடன் | 3-50 |
| வெற்றிஉனதே திரு கோ நடேசையர் எழுதிய ஓர் அரிய அகவெழுச்சி நூல் | 1-25 |

மற்றும் சகலவிதமான புத்தகங்களும் கிடைக்கும்.

புத்தக விலைப்பட்டி இனாம்

சரஸ்வதி புத்தகசாலை

175 செட்டியார் தெரு கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சென்ட்ரல் (மருதானை)


## இரண்டாவது வாரம் !

டி. ஆர். ராமச்சந்திரன், டி. கே. ராமச்சந்திரன்
பி. வி. நரசிப்மபாரதி, பி. கே. சரஸ்வதி
லக்ஷ்மிபிரபா, எப். சரோஜா முதலியோர் நடித்த

குதூகலம் கொழிக்கும் குணச் சித்திரம்
பார்க்கத் தவறாதீர்கள்




# மாப்பிள்ளை



'பியூன்' பெரியண்ணன் லட்சாதிபதி ஆகிறான். "ஈட்டி எட்டினமட்டும் பணம் பாதாளம்மட்டும்" அல்லவா? எனவே எஜமான் தங்கையை மணக்கிறான்'

ஆனால் நளினியோ டாக்டர் குமாரைத் 'தேன் மலர் மேவும் தென்ற'லாகக் காண்கிறாள். குமாரும் அப்படித்தான். நளினி, 'வான்முகில் மேவும் வளர்மதி' அவனுக்கு.

அண்ணன் சிகாமணி நயவஞ்சகன் – சுயநலத்தால் தங்கையின் வாழ்வைப் பாழாக்கி, அவள் ஆத்மாவைத் துடிக்கச் செய்கிறான்.

மாஜி பியூனை – மைத்துனன் பெரியண்ணனைக் கொலைசெய்ய ஏற்பாடுகள் நடக்கின்றன நளினியின் வாழ்வை நாசமாக்கிவிட்ட மூடசிகாமணி என்ன ஆனான்?

பதில் வெள்ளித் திரையில் காண்க.

# முருகன் தியேட்டர் (ஜிந்துப்பிட்டி)

## ஏராளமான ரசிகர்களின் வேண்டுகோள்மீது
## உங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட
## திரை விருந்து !

அமைதியும், அழகும, எளிமையும கொண்ட
கிராம வாழ்க்கை

இன்னிசை நிறைந்த நாடோடிப் பாடல்கள்
சினிமா விசிறிகளின் சிருங்கார நக்ஷத்திரப்

## அஞ்சலிதேவி அழகு நடிகர் நாகேஸ்வரராவ்

முதலியோர் நடிப்பது.

ஞாயிறுகாலை 10மணிக்கு விசேஷகாட்சி. சனியும் ஞாயிறும்பிற்பகல்2மணி,6மணி,9-30மணி
மற்ற நாட்களில் மாலை 6மணிக்கும் இரவு 9-30 மணிக்கும்

# கிராமப்பெண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தைரியத்தை கைவிடாதே!

"சகோதரனே தைரியமாயிரு ஒருபோதும் தைரியத்தைக் கைவிடாதே! தைரியத்தை ஒழித்துக் கோழையாகிவிடாதே! நல்லதைச் செய்வதற்குச் சிறிதேனும் அஞ்சாதே!— நியாயமானதைச் செய்வதற்கு ஒருபோதும் அஞ்சாதே!

ஆனால்............ கெட்ட காரியங்களில் தைரியமாக நுழைந்துவிடாதே! கெட்ட காரியத்தில் தலையிடுவதற்குப் பதிலாக நல்ல காரியத்திலேயே உன் வாழ்நாளை கழி

நாம் சிறுவர்களாயிருக்கும்போதே தைரியசாலிகளாயிருந்தால்தான் பிற்காலத்தில் வீரர்களாய்த் திகழலாம்

'பேய்'', ''பிசாசு'', ''பூச்சாண்டி'' என்டவைகளை ஒருபோதும் நம்பாதே!

சரி. இனிமேல் கதைகளை வாசித்து நீயும் ஓர் வீரனாகத்திகழ்வாயாக!

ஃ

"சாஜஹான் வடமேற்கிலுள்ள 'பால்க்'', ''படக்ஷான்'' முதலிய பிரதேசங்களை ஜெயிப்பதற்காக படையனுப்பத் தீர்மானித்தார். ஆனால் அப்படைக்குத் தளபதியாகவர ஒருவரும் முன்வரவில்லை. அச்சமயத்தில் திடகாத்திர புருஷரான ஒருவர் முன்வந்தார். அவர்தான் அவ்வேலைக்குத் தகுந்தவரென்றெண்ணி அவரையே தேர்ந்தெடுத்தார் சாஜஹான்.

பிறகு, அந்த தளபதியின் கீழ் ஓர் பெரிய படை புறப்பட்டது எதிர்களை எதிர்க்க!

இம் முகலாயப் படைகளும் எதிரியாகிய அட்துல் அஜீஸ் மன்னரின் படைகளும் ''பால்க்'' சமவெளியில் சந்தித்தன. உடனே மூண்டது கடும்போர்! புது தளபதி வெகு உக்கிரமாக சண்டைசெய்தார் எதிரிகளின் எண்ணிலடங்கா தலைகளில் பெரும்பாலானவை தளபதியின் கத்திக்கு இரையாயின!

வெகு நேரம்வரை யாருக்கு வெற்றி யாருக்குத் தோல்வி என்று தெரியாமலிருந்தது. உச்சிப்பொழுதாகிவிட்டது. தளபதி வழக்கமாக தொழுதுவரும் ''லுஹர்'' தொழுகைக்கு நேரமாகிவிட்டது. எப்படியேனும் தொழுதாகவேண்டும். ஆனால், கடும் போர் நடக்கிறது, எதிரிகளும் எதிரிகளும் இவருக்குச் சுற்றிலுமிருந்து தாக்கிக்கொள்கின்றனர். எப்படித் தொழுவது!......?.........?

ஆனால் தளபதி என்ன செய்தார் தெரியுமா? உடனே யானை மேலிருந்து அப்பாரியைவிட்டுக் கீழே இறங்கினர். கால், கைகளை அலப்பி சுத்தம் செய்துக்கொண்டார் ஓர் ஜமுக்காளத்தை விரித்து அதிலே உட்கார்ந்து, தன் மனதை இறைவன்பால் செலுத்தி பிரார்த்தித்தார்!

தன்னைச் சுற்றிலும் கடும்போர் நடக்கிறதைக் கவனித்தாரா? அதுதான் இல்லை

பார்த்தாயா அவருடைய தைரியத்தை சகோதரனே, இப்படிப்பட்ட வீரரின் பெயரைக் கேட்க உனக்கு விருப்பமாயிருக்கிறதா? அப்படியானல் இதோ கூறுகிறேன் அவர்தான் ஔரங்கஜீப!

ஃ

"நடுச்சாமப் தற்செயலாய் விழித்த பெற்றோர் அவர்களுடைய ஒரே புதல்வனை படுக்கையில் காணாது திடுக்கிட்டனர். உடனே தேடினர் ஊரெல்லாம்; வீடெல்லாம். ஒரு இடத்திலும் காணவில்லை! ஆனல் நடுக்காட்டிலுள்ள ஓர் குளத்தில் துள்ளி விளையாடும் மீன்களைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தான் அவ்வெட்டு வயதுப் பாலகன்! தாய் ஓடிச்சென்று கட்டி முத்தமிட்டு ''மகனே இவ்வேளையில் நீ இங்கே இருக்கின்றாயே, உனக்குப் பயமாக இருக்கவில்லை?'' என்று கேட்டாள். அதற்கு அச்சிறுவன் ''பயம் என்றாலென்னம்மா?'' என்று பதில் கேள்வி கேட்டான்''

சகோதரனே, பார்த்தாயா அந்த பால் மணம் மாரு பாலகனுக்கிருந்த தைரியத்தை?

அந்தப் பையன்தான் பிற்காலத்தில் உலகோர் போற்றும் வீராதி வீரனானன்

அவன்தான் அஞ்சா வீரன் நெப்போலியன்.

ஃ

"ஓர் நாள் ''படான்'' காலத்திலுள்ள ஓர் தோட்டத்தில் உட்கார்ந்திருந்தார் மெக் ஆர்தர். அப்பொழுது திடீரென்று ஜப்பானிய சுழல் விமானங்கள் தலைக்குமேலே வட்டமிட்டு, தாக்க ஆரம்பித்தன. மெக் ஆர்தர் பதுங்குமிடத்திற்கு சற்றும் அவசரமில்லாமல் மெதுவாக நடந்துச் சென்ருராம்! இதைக் கண்ட அவருடைய நண்பர் ஒருவர் சீக்கிரமாக ஓடும்படி சைகை காட்டினர். ஆனல் மெக் ஆர்தரோ ''என்னை அவசரப்படுததக்கூடிய ஓர் ஜப்பானியனும் இந்த உலகத்திலிருக்கிருனே?'' என்று சாகவாசமாக சிகரெட் பற்றவைத்துக் கொண்டே கேட்டாராம்''

சகோதரனே, பார் இவர்களுடைய தைரியங்களை கொஞ்சங்கூட பயமில்லாமல் இவர்கள் செய்த காரியங்களைப் பார்த்தாயா? இவர்கள் மாதிரியே நீயும் திகழ்வாயாக.

பயத்திற்கஞ்சாதே! நீதிக்கஞ்சு கோழையாகிவி[illegible]தே. இரு எப்பொழுதும் தைரியமாய் எதற்கும் அஞ்சாதே!

வாழ்க தைரியம்!

டி. ஆ விஜயன்
கதிரேசன் கல்லூரி
நாவலப்பிட்டி

—

## படியுங்கள்

நூற்களில் மாத்திரம் நல்லவைகளைப் படிக்கலாம் என்றெண்ணும் மாணவர்களே கேளுங்கள். எங்கள் மாணவ வாழ்க்கையில் நடக்கும் அநேக நிகழ்ச்சிகள் படிப்பதிலும் நம்மை நல்வழிக்கு இழுத்துச் செல்வதாயிருக்கின்றன. அவ்வித நிகழ்ச்சிகள் அன்ருடவாழ்க்கையில் நாம் பார்க்கலாம்.

நல்லவைகளைப் படிக்க எல்லோருக்கும் விருப்பம் இருக்கத்தான் செய்யும் அந்த நல்லவைகள் ஒருசில மற்றவர்களுக்குத் தீமையாகவும் இருக்கும் அதை நல்லதென்று அறிந்தவன் உணர நீண்டநேரம், நாட்கள் பிடிக்கக்கூடும். அதுவரையும் தன் கொள்கைதான் நல்லது என்று சொல்லி, எண்ணிக்கொண்டு கூச்சல் போடுவான். ஒருவகையில் முட்டாளாகத்தான் இருக்க வேண்டும் ஆகவே தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்தாம் இருக்கின்றன என்று சொல்லி இன்னொருவரை நம்பச் செய்வது தன் அறியாமையை மற்றவனுக்குச் சொல்லாமல் சொல்வதாகும். ஆனபடியால் படித்தால் மட்டும் போதாது அது சரியா பிழையா என்றுணரவேண்டும் அப்படி செய்யின் அதனுல் நாம் அநேக நன்மைகள் பெறலாம். ஆகவே படிக்க வேண்டியதைப் படியுங்கள்

எஸ் ஆர். குமாரசுவாமி,
சந்திரவிலாஸ் மலர்
கொழும்பு-13

## விளையும பயிர்............



பிரிட்டிஷ்சாம்ராஜ்யத்தில்புகழ்பெற்ற ராய் அன்க்ரா என்ற பிரபல குத்துச் சண்டை வீரர் உணர்ச்சி மிகுந்த ஒரு சிறுவனுக்கு குத்துச்சண்டை பயிற்சி அளிக்கிறார். அச்சிறுவன் வருங்காலத்தில் ''உலக சாம்பியன்'' ஆவான் என்ற நம்பிக்கையோடு.

# கேட்டுப்பாருங்கள்?

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

க. கனகராசா,
விமன்காமம்

கே: அமெரிக்காவில் முற்காலத்தில் அடிமை வியாபாரம் நடந்ததுபோல் தற்போது இலங்கையில் நடக்கும் வியாபாரம் என்ன?

கே: கள்ளத் தோணி வியாபாரம்.

ஃ

மு. ஷம்ஷுத்தீன்,
வெலிசறை

கே: இறந்தவர்களின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதேன்?

ப: தங்கள் பிறந்த தினம் படும்பாட்டைப் பார்த்துவிட்டு திரும்ப அவர்கள் பிறவாதிருப்பதற்காக.

ஃ

இராஜயோகேஸ்வரி,
கரப்பன்

கே: எல்லாம்விட்டு சரியை என்னத்தை விட்டு இறக்கவேண்டும்

ப: அடுப்பைவிட்டு இறக்கவேண்டும்.

கே: பெண்கள் கல்வி கற்கவேண்டிய அவசியம் என்ன?

ப: கணவனுக்கு வரும் கடிதங்களைத் திருடி வாசிப்பதற்காக

ஃ

சரோஜினி சுந்தரம்,
திரிகோணமலை.

கே: ஒருவன் தன் மனைவியுடனும் தாயாருடனும் படகில் கடல் பிரயாணம் செய்யும்போது படகு சரிந்து மனைவியும் தாயும் தத்தளிக்க நேரிடும்போது அவன் யாரைக் காப்பாற்ற வேண்டும்?

ப: இருவரையும்தான். ஆயினும் தாயைத்தான் முதலில காப்பாற்றவேண்டும். ஏனெனில் மனைவி போனல் இன்னென்றைத் தேடிக்கொள்ளலாம். தாயார் நமக்கு ஒருத்திதானே இருக்கமுடியும்.

ஃ

கே. செல்லையா, எருவில்.

கே: கட்டிப் பேசுவேன் என்று கிட்டபிட்டுச்சென்ற பட்டிருப்புப் பிரதிநிதி பெட்டிப் பாம்புபோல் சட்ட சபையில் ஒட்டிப் பதுங்குவதேன்?

ப: கிட்டடியில் ஒரு குட்டிப் பதவியைத் தட்டிக் கொள்ளலாமென்று கொட்டாவி விட்டுக்கொண்டிருப்பார் போலும்!

ஃ

"சிங்காரி" சின்னவாடி.

கே: குடியைக் கெடுப்பவன் யார்? குணத்தைக் கெடுப்பவன் யார்?

ப: குடியைக் கெடுப்பவன் மது குணத்தைக் கெடுப்பன் பணம்.

ஃ

ஜே. எஸ். தம்பிராஜா — களுவானசிகுடி.

கே: மட்டக்களப்புப் பிரதிநிதி திரு கதிராமர் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கூட தன் வாயைத் திறவாமல் இருந்ததின் மர்மம் என்ன?

ப: அவர் தம் சொந்த வரவு செலவுத் திட்டத்தில் மூழ்கியிருந்திருக்கலாம்.

ஃ

★ வீ. ராமையா புசலாவ

கே: வீட்டிற்கும் கோயிலுக்கும் உள்ள வித்தியாசமென்ன?

ப: வீட்டில் குழந்தைகள் என்னும் உயிர்த் தெய்வங்கள் வாழ்கின்றன. கோயிலில் விகரகங்கள் என்னும் கல்லுத் தெய்வங்கள் துயில்கின்றன.

ஃ

மு. யோகேந்திரம்,
யாழ்ப்பாணம்.

கே: பணக்காரனைப் படைத்த கடவுள் பாட்டாளியை ஏன் படைத்தார்?

ப: பணக்காரனுக்கு உழைத்துக் கொடுப்பதற்காக.

ஃ

ஏ. ஜீ. எஸ். பரீசா,
புத்தளம்

கே: யு. என். பி. அரசாங்கத்தில் தாங்கள் ஒரு பிரசார மந்திரியாக உத்தியோகம் பார்த்தால் என்ன?

ப: பார்த்தால் என்ன, பொது மக்களின் வரிப் பணத்தில் மேலும் ரூபாய் ஆயிரத்தைந்நூறு மாதா மாதம் துண்டுவிழும்.

ஃ

கே. மணிபகாரர்,
உடுப்புசலா

கே: குடிகெடுப்பவன் கும்பாபிஷேகம் செய்கிருன். கொள்ளையடித்தவன் வெள்ளி ரிஷபம் செய்துவைக்கிருன். விபசாரி விசேஷ அபிஷேகம் நடத்துவிக்கிருள். இவ்வளவையும் ஏற்றுக்கொள்கிருர் தடையில்றி ஆண்டவன் ஏற்கலாமா?

ப: கைக்கூலியை ஏற்பது என்று முடிவு செய்துவிட்டால அது யார் கொடுப்பதாயிருந்தால்தான் என்ன?

★ இவ்வாரம் ரூபா 3-00 பரிசு பெற்றவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரிசிக் கூப்பன் வழங்கும் அரசாங்கத் திட்டம்

## இந்தியர்களுக்கு எதிரான மற்றொரு நடவடிக்கையா?

**தே**வைக்கு மேலதிகமாக 6 லட்சம் கூப்பன்கள் அச்சிடப்பட்டன அவற்றில் எத்தனை கூப்பன்கள் மாயமாய் மறைந்தன, யாரால் எப்படி அவை திருடப்பட்டன என்ற விபரங்களையெல்லாம் அரசாங்கத்தால் கண்டுபிடிக்கமுடியவில்லை

1953 ஜனவரி முதற் தேதியிலிருந்து ஆளுக்கொரு கூப்பன் என்ற முறைபோய், குடும்பத்திற்கு ஒரு கூப்பன் வீதம் விநியோகிக்கப்படுமாம். அதற்காக நவம்பர் 27-ந் தேதி நாடு முழுவதும் ஜனசங்கி எடுக்கப்படுமென கூறப்படுகிறது.

இந்நாட்டு ஜனங்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டிய தொகைக்குமேல் 6,00 000 கூப்பன் புத்தகங்கள் அதிகப்படியாக அச்சிடப்பட்டனவாம் இவ்வாறு தேவைக்கு அதிகமாக கூப்பன் அச்சிடவேண்டிய காரணமென்ன என்பதற்கு ஆட்சியாளர் இதுவரை சரியான சமாதானம் கூறவில்லை அவைகள் யாருக்கு யாரால் எப்படி, எப்பொழுது கொடுக்கப்பட்டன என்பதையும் அவர்களால் கண்டுபிடிக்கவில்லை. ஒரு சிலர் அதிகப்படியான சில கூப்பன்கள் வைத்திருந்ததாக வழக்குத் தொடர்ந்திருக்கிறார்களே தவிர இவ்வளவு பெருந்தொகையான கூப்பன்கள் சென்ற இடத்தை அவர்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை. துப்பறியும் புலிகளாலும் துப்புத் துலக்க இயலவில்லை. அவைகள் கள்ளத் தோணிப் பேர்வழிகளிடம் சிக்கிவிட்டனவென்று ஆருடம்கூறி தங்களைத் தாங்களே சமாதானப்படுத்திக் கொண்டார்கள். பொதுத் தேர்தல் சமயத்திலே தேவைப்பட்ட வாக்குச் சீட்டுத் தொகைக்குமேல் லட்சக்கணக்கான வாக்குச் சீட்டுகள் அச்சடித்ததின் விளைவாக நாட்டிலே ஏற்பட்ட ரகளையும் காபுராவும் அனைவரும் அறிந்ததே வாக்குச் சீட்டுகளைப்போல கூப்பன் புத்தகங்களையும் தேவைக்கதிகமாக அச்சடித்துவிட்டார்களென்று எண்ணி, பொதுமக்கள் திருப்தியடைந்துவிட வேண்டியதுதான் போலும்.

இனிமேல் இம்மாதிரியான பித்தலாட்டத்தனங்கள் நடைபெறாமலிருப்பதற்காக ஆளுக்கொரு கூப்பன் புத்தகம் என்றிருப்பதை குடும்பத்திற்கொரு புத்தகமாக கொடுக்கப்போகிறார்களாம். அருமையான திட்டந்தான். இவ்வாறு செய்வதால் "கள்ளத் தோணிகள்" கையில் கூப்பன் சிக்கமுடியாமல் போவதுடன், கூப்பன் புத்தகங்கள் மூலம் இந்தியாவுக்கு பணம் அனுப்புவதற்கும் முற்றுப்புள்ளிவைத்துவிடலாம்.

ஆளுக்கொரு கூப்பன் கொடுத்ததில் ஏகப்பட்ட ஊழல்கள் ஏற்பட்டுவிட்டதெனக்கூறி, 1953 ஏப்ரல் மாதத்தில் காலாவதியாக வேண்டிய 12-வது இலக்க கூப்பன் புத்தகத்தை 1952 டிசம்பர் மாதத்திலேயே ரத்து செய்துவிட்டு, 'குடும்பத்திற்கொரு கூப்பன்' என்ற திட்டத்தை அமுல் நடத்தப்போகிறார்கள் ஆட்சியாளர்கள் அதிலும் ஊழல்கள் தலைகாட்டத் தொடங்கினால் அப்புறம் என்ன செய்வார்களோ?

பங்கீடு அமுலில் இருக்கும் இதர நாடுகளில் பங்கீடு செய்யப்படும் குறிப்பிட்ட உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள தான் கூப்பன் புத்தகம் உபயோகிக்கப்படுகிறது. ஆனால் இந்த நாட்டிலோ கூப்பனைக்கொண்டு எத்தனையோ பெரிய பெரிய காரியங்களையெல்லாம் சாதித்துக்கொள்ளலாம் கூப்பன் புத்தகத்தைக்கொண்டு அரிசி வாங்கலாம், கள்ளத் தோணியில் வரவில்லையென்று நிரூபிக்கலாம் இந்தியாவுக்குப் பணம் அனுப்பலாம். ஆபத்து சமயத்தில் கையில் பணம் இல்லையானால் தங்க நகைச் சாமான்களைப்போல அடகு வைக்கலாம். இன்னும் எத்தனையோ அனுகூலங்களையெல்லாம் செய்துகொள்ளலாம். ஆனால் இனிமேல் அது முடியாதாம். குடும்பங்களுக்கு கொடுக்கப்படும் கூப்பன் புத்தகங்கள் வெறும் ரேஷன் கூப்பன் புத்தகங்களாகவே இருக்குமாம்.

1953 ஜனவரி முதலாந் தேதி முதல் இந்தியர்கள் கூப்பன் புத்தகங்களைக் கொண்டு பணம் அனுப்புவது ரத்துச்செய்யப்படுமாம். அதற்குப் பதிலாக இந்தியாவுக்கு பணம் அனுப்ப "பர்மிட்" முறை ஏற்படுத்தப்படுமாம். வேறு வார்த்தைகளில் கூறினால் இந்தியர்கள் தாங்கள் உழைத்துச் சம்பாதித்த பணத்தை தம் உற்றார் உறவினர்களுக்கு அனுப்ப முடியாது சிரமப்படுவார்கள். பர்மிட் முறையில் பல ஊழல் ஏற்பட இடமிருக்கிறது இதனால் அவர்கள் பெரும்பாலும் பாதிக்கப்படுவார்களென்பதில் சந்தேகமில்லை. இந்தியர்கள் பணம் அனுப்புவதை அடியோடு தடை செய்வதற்காக இது ஆரம்ப ஏற்பாடாக இருக்குமா?

புதிய கூப்பன் புத்தகங்கள் தவறிவிட்டால், எக்காரணத்தை முன்னிட்டும் அதற்குப் பதிலாக கூப்பன் புத்தகப் பிரதிகள் கொடுக்கப்பட மாட்டாதாம். இது விந்தையானது மட்டுமின்றி விபரீதமான திட்டமுமாகும் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலத்திற்கோ, அல்லது லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கோ உரிய பத்திரங்கள் காணாமல் போனாலும்கூட பதிவு அதிகாரியின் காரியாலயத்தில் அதற்கு வேறு பிரதிகள் பெற்றுக்கொள்ள முடியும். ஏன், பெருந்தொகைக்கு எழுதப்பட்ட ஒரு "செக்" தவறிப் போனாலும்கூட, அதனை உடனே தெரிவித்து அந்தச் 'செக்'கை செலாவணியாகாமல் தடை செய்து, அதற்குப் பதிலாக வேறு புதிய செக்' பெற்றுக் கொள்ள முடியுமே அநேகமாக மதிப்புள்ள எல்லா தஸ்தாவேஜுகளுக்குமே நகல்கள் பெற்றுக் கொள்வது சாத்தியமே ஆனால் கூப்பன் புத்தகத்தை தவறவிட்டால், பிறகு அவருக்கு புதிய கூப்பன் நிச்சயமாக கொடுக்கப்பட மாட்டாதாம் கூப்பனைத் தவறவிட்ட இலங்கையர்களை "கள்ளத்தோணி" என்று நாடுகடத்தி விட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை

களனி ஆறு, களுகங்கா முதலிய நதிகள் சில சமயங்களில் வெள்ளப்பெருக்கெடுத்து நூற்றுக் கணக்கான வீடுகளை திடீரென விழுங்கி விடுவதால் ஆயிரக் கணக்கான மக்கள் வீடுகளுடன் வீட்டுச் சாமான்களையும் இழந்து தவிக்க நேரிடுகிறது அந்த வெள்ளம் நகை நட்டு பணம் காசுகளுடன் சேர்த்து எத்தனையோ கூப்பன் புத்தகங்களையும் அடித்துக் கொண்டுபோய் விடுகிறது. திடீரென வீட்டிலே தீப்பிடித்து இதர சாமான்களுடன் சேர்ந்து கூப்பன் புத்தகங்களும் பஸ்பமாகிவிடுகின்றன. சில சமயங்களில் திருடர்கள் மற்றச் சாமான்களும் கூப்பனையையும் தெரிந்தோ தெரியாமலோ அடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள் தனது எதிரியை கூப்பன் இல்லாத அனாதையாக்கிவிட வேண்டுமென்பதற்காக ஒருவன் அதைத் திருடிவிடலாம். இல்லை மேல் அரிசி வாங்கப் போகும்போது இடை வழியில் கூப்பனை அடித்துப் பிடுங்கிவிடலாம். இன்னும் எத்தனையோ திடீர் சம்பவங்களால் கூப்பனை தவறிவிடுவது சாத்தியமே

இவ்வாறு கூப்பன் புத்தகத்தை இழந்தவர்களின் கதி என்ன? அவர்களைப் பிடித்து நாடு கடத்திவிட வேண்டியதுதானா? ஆதலால் தவறிப்போன கூப்பன் புத்தகங்களுக்குப் பதில் வேறு நகல் புத்தகங்கள் கொடுக்க முடியாது என்பது விபரீத விளைவுகளை ஏற்படுத்துமென்று எச்சரிக்கிறோம். கூப்பன் புத்தகங்கள் காணாமற் போனதால் புதிய புத்தகங்கள் வாங்குவதற்காக உணவு அதிகாரி காரியாலயத்திற்கும் வீட்டுக்குமாக அலைந்து அல்லல் படுகிறவர்களையும் பல்வேறு காரணங்களை முன்னிட்டு இதுவரை அரிசிக் கூப்பன் வாங்க முடியாமலிருந்து, இப்பொழுது கூப்பன் வாங்குவதற்காக விண்ணையும் மண்ணையும் புரட்டிக் கொண்டிருப்பவர்களையும் நவம்பர் 27ந் தேதி எடுக்கப்படுவதாக கூறப்படும் ஜனசங்கியில் சேர்த்து அவர்களுக்கும் கூப்பன் கொடுப்பதற்கு எக்காரணத்தை முன்னிட்டும் அரசாங்கம் தவறிவிடக்கூடாது.


## இரும்புப் பணப் பெட்டிகள்

---o---

லண்டன் நகர ஜோண்டான் லிமிட்டெட்டாரால் உற்பத்தி செய்யப்பட்டவை.

1795-ம் ஆண்டில் ஸ்தாபிதம் - மிகப் பழைய ஸ்தாபனம் - உலகத்திலேயே மிகக் கைதேர்ந்த க்ஷேமயந்திர சிற்பிகள்

நெருப்பைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது அதனுள் உள்ள பொருள்களை இதுவரை நெருப்பால் நாசப்படவில்லை



கள்வர்களைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது இதுவரையில் கள்வர்களால் திறக்கப்படவில்லை

## டொட்வெல் & கம்பெனி லிமிட்டெட்.

ஆபீஸ் பொருட்கள் விற்பனை பகுதி

18/20, குவீன்ஸ் வீதி கோட்டை கொழும்பு

போன்: 2301



நாள்தோறும் சுகமாக மலம்கழிவதற்கு

## ரிஷி லேகியம்

(ரிஷி கருணைக்கிழங்கு லேகியம்)

மேலானது.



தினம் மலஜலங்களை சுகமாகக் கழியச் செய்து, கீழ்க் குறிப்பிட்ட வியாதிகளையும் குணப்படுத்துவதில் பேர்பெற்றது

தேககூடு, துர் வியாதிகள், அசதி, சோம்பல். மேக, கை, கால், கண் எரிச்சல் காந்தல், வலிகள், வயிற்றுப் பொருமல், வாய்ப்புண், வயிற்றுப்புண், இடுப்பு வலி தலைகிறுகிறுப்பு, நெஞ்சடைப்பு, வயிற்றில்கட்டி, வயிற்றில்வலி, சூலைவலி குன்மவலி, சூதகசிக்கல் சூதக வாய்வு மண்டையிடி, பசி குறைவு, இளைப்பு மூலம், கை, கால், தேகம் வீக்கங்கள், கிரந்தி புண்கள் ஊரல், சொறி, இரத்த அசுத்தத்தால் உண்டாகும் வியாதிகளையும் குணமாக்குவதுடன், உள்மூலம், வெளிமூலம், ரத்தமூலம், சீழ்மூலம், ஆசனத்தில் எரிச்சல் ஏற்படுவது, காந்தல், திணவு குத்தல், கடுப்பு கிருமி உபத்திரவம் ஆசனத்தைச்சுற்றி கொப்புளம் உண்டாவது ஆகியவைகளையும் தீராத மலச் சிக்கல்களையும் அனைவரும் ஆச்சரியம் அடையும்வகையில் குணப்படுத்தும்.


| | |
|---|---|
| 30 நாள் மருந்து | ரூ 5/50 |
| 10 ,, ,, | ரூ 3/- |
| தபால் செலவு சதம் - | 85 |

ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு. கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிங்ஸ்லி (கொழும்பு) சபையர் (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) மோடர்ன் (பதுளை) தீவெளி (நுவரெலியா)



விஜயாவின்

டைரக்ஷன்... பிரசாத் * தயாரிப்பு... நாகிரெட்டி & சக்ரபாணி

# கல்யாணம் பண்ணிப்பார்

கல்யாணமும் ஹாஸ்யமும் கலந்து உறவாடும்
கண்கவர் சித்திரம்

பல்லாயிரம் ரசிகர்கள் பாராட்டும் பாங்கான ஓவியம்

என்.டி. ராமராவ் ஜி. வரலக்ஷ்மி, கிருஷ்ணராவ்
சாவித்திரி நடித்தது.

மைலன்
நாகேஸ்வரராவ், பாலையா, லலிதா-பத்மினி
நடிக்கும்
'ஓர் இரவு' (தமிழ்)

காமினி
ராஜ்கபூர் - நர்கிஸ்
நடிக்கும்
அன் ஹோனி (ஹிந்தி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு, தட்டாதெரு, 196ம் இலக்க ... சிவநாயகம் அவர்களால் ஸிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பில் 194 ஏ, தட்டாதெரு, சுதந்திர அச்சகத்தில் பதிப்பித்து 1952 ஒக்டோபர் 26ந்தேதி பிரசுரஞ்செய்யப்பட்டது.